803

விக்ருதி வருஷ பங்குனிமீ

ஸம்புடம் - 9
ஸஞ்சிகை - 3

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

803 / 1-50

ஸம்பாதகர்:
P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,
சென்னை—7.

3L
Q22ணவ1, N41
N50·9·3
189268

MARCH 1950
Vol. 9 No. 3.

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	68
2.	ஹிந்து மதம்	71
3.	உபய வேதாந்த ஐககண்ட்யம்	76
4.	ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்	78
5.	மது வித்யா	89
6.	சர்ச்சா லஹரீ	90
7.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	92
8.	செய்திகள்	93
9.	ஸம்பாதகரின் குறிப்புகள்	96

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி

கருட வாஹன கைங்கர்யம்

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானத்திலுள்ள தங்க முலாம் தீட்டப்பட்ட கருட வாஹனம் ஜீர்ணமானதன் பயனாக ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி பிரம்மோத்ஸவங்களில் அதை உபயோகிப்பதில் சிரமமேற்பட்டதால் மேற்படி வாஹனத்தைப் புதிதாக நிர்மாணஞ் செய்ய ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கர் (தேவஸ்தான பரம்பரை டிரஸ்டி) நியமனப்படி இப்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புனித கைங்கரியம் பூர்த்தியடைய பெரும் தொகை தேவையாக விருக்கிறது. இந்த முக்கியமான பெரிய பிரார்த்தனை ஸ்தலத்தில் ஈடுபட்டுள்ள பக்தர்கள் தங்களாலியன்ற திரவிய உதவியளித்து கைங்கரியம் நிறைவேற ஆதரவளிக்க வேண்டுமெனக் கோரப்படுகிறது. வாஹன வேலை ஆரம்பமாகியுள்ளது. சித்திரை மாதம் வரும் பிரம்மோத்ஸவத்திற்குள் இது பூர்த்தியடைய வேண்டுமென்பது அவா. நன்கொடையளிப்பவர்கள் தேவஸ்தான கௌரவ ஏஜண்டுக்கு மணியார்டர் அல்லது செக் மூலம் அனுப்பவும்.

கௌரவ ஏஜண்டு,

திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானம்,

திருவள்ளூர், (M. S. M. Ry.)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விரோதி ஹு பங்குனி மீ	ஸஞ்சிகை 3

“அஹோபிலே காருடஸைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதானம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஸரணம் ப்ரபத்யே ॥”

—— :: ——

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபதபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9–ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

“ கயாசித் நிராலம்பம் கசித்ஸ்ரத்தவ்ரதம் ப்ரவிசாது ।

ஆகாசஹரஸ ஈசாலாஹம் வரமயிகுருத ஷாஷ்டம் ॥ ”

ஸமாதியென்பது, மனம் உள்ளே சென்றுகொண்டு த்யாநம் செய்யப்படும் பரமாத்மா, உள்ளே தஹராகாசமாக ஹ்ருதய மென்னும் தஹராகாசத்தி லிருப்பவரில் லயிக்கவேணும். ஆகாசத்தின்மேலே ஏறினாலும் ஏறலாம்; உள்ளிருக்கும் இந்த தஹராகாசத்தில் யோகம் ஏறுவது மிக்க கடிநம். ஆகாசத்தில் பிடிப்பான ஓர் அவலம்ப மில்லாமல் ஏற முடியாது. இவனுக்குக் கணக்கற்ற அநாதி வினை விலங்குகள் காலில் மாட்டியிருக்கின்றன. இவன் எப்படி ஆகாசத்தி லேறக்கூடும்? இங்கே ‘ய ஏஷோந்தர்ஹ்ருதய ஆகாச தஸ்மிந் சேதே’ என்கிற ப்ருஹதாரண்யக ச்ருதியில் ஹ்ருதய வெளியைப் பரமாத்மாவிற்கு வாஸஸ்தாநமாகக் குறித்திருப்பதை நினைக்கிறார். அந்த வெளியில் தஹராகாசம் என்னும் பரமாத்மா இருப்பது. ஹ்ருதய வெளி பூதாகாசம். அதில் வஸிப்பது தஹராகாசம் என்னும் பகவான். ஹ்ருதயாகாசத்தில் யோகம் ஏறித் தஹராகாசத்தை ஸாக்ஷாத்கரிக்கவேணும். அவர் ஸ்வரூபம் புலன்களுக்கும் எட்டுவதில்லை. ‘எந்த ஆலம்பநத்தைக்கொண்டு யோகம் இந்த ஆகாசத்தில் ஏறக்கூடும்?’ என்ற கவலையும் ஆலோசனையும் நடையாடுகின்றன. ‘தஹரகுஹரவர்த்தி கச்சிதாத்மா நிரவதிவைபவசாலி ஸ்ரத்த:’ என்ற ச்லோகத்தில் ‘நிஷிவோதி’, ‘நிரவோதி’ என்று இருவித பாடங்களு மிருக்கலாம். ‘கச்சிதாத்மா நிரவோதி’ என்கிற பாடத்தை இங்கே ‘கசித்ஸ்ரத்தவ்ரத:’ என்பதும், ‘நிரவிசதே தாவநாசெப வஸ்த்ராக’ என்கிற ஸாராவளியும் அநுக்ரஹிக்கலாம்.

[சற்று ஆலோசித்துவிட்டு] இந்த வழியாக ஆலம்பம் கிடைத்து இந்த யோகம் ஸுலப மாகட்டும்.

“ ஹம்ஸோ ரூப, ஹம்ஸ ரூ, நமஸ்ய ப்ரஹ்ம வஸ்தாரூபம் நயத்ராதக:

… தத்வே யசோத்வி யூஹ ஸ்ரிஹாதரபேத்யா தசீதரப்யதே ।

பூதத்வஸ்யா … வஷ்டணி வ நஸ்தஸ்மிந் தரஸவைஷ்ணவதே

நாயஸ்வோஹஸ ஹம் … உதத்வி மிரோ நாயத்ராவஸ்யத்ராவஸ தாம் ॥ ”

தமிழ்நாடு …
189268

திவ்யமங்கள விக்ரஹத்தோடு கூடியவராகப் பரமாத்மாவை த்யாநம் செய்வதால், இந்த ஆகாஶத்தில் யோகம் ஏறுவதற்குத் தக்க ஆலம்பநம் (பிடி) உளதே. ஸாலம்பந யோகமே இது. நிராலம்பநமாய் ஏறவேண்டுமென்ற பய மில்லை. ஈச்வர த்யாநத்தில் க்ஷேத்ரஜ்ஞனை முமுக்ஷுவிற்கு மிக உயர்ந்த அத்யந்த சுத்தி யேற்பட்டு, மிக சுத்தி பெற்ற அவன் மனக்கண் பகவத் ஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரிக்கும் சக்தி யுடையதாக ஆகக்கூடும். ‘க்ஷேத்ரஜ்ஞேஶ்வர ஜ்ஞாநாத் விஶுத்தி: பரமா மதா’ என்ற யாஜ்ஞ்யவல்க்ய வசநம் ஸ்ரீ ரஹஸ்ய த்ரயஸாரத்தில் அத்யந்த சுத்தி என்னும் மோக்ஷத்தை யளிப்பதற்கும் உதாஹரிக்கப்பட்டது. ஈச்வர த்யாநத்தால் ரஜஸ் தமஸ்ஸுக்கள் நீங்கி ஸத்வமே மிகமிகப் பெருகி த்யாநம் ஸுகமாகுமென்பது, ‘ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே’ என்பதால் காட்டப்படுகிறது. திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டமான த்யாநம், ஸம்பூர்ணமான ஆநந்தம் கிளம்பி மேலும் மேலும் வெள்ளமிட் டோடுவதற்கு இடமாயிருக்கிறது. காமிகளுக்கு ஆலம்பந விபாவம் அவர்கள் காமிக்கும் வ்யக்தியின் சரீரம். பகவத் காமப் பெருக்கெனும் பக்தி யோகத்தில் பகவானுடைய லாவண்ய ஸாகரமான திவ்ய திருமேனி ஆலம்பநமென்று ரஸம். ‘ஸுந்தரீ காமம் ஜநயதி’ என்று ஸூத்ரக்காரரும் இந்த ரஸத்தை வ்யஞ்ஜநம் செய்தார். ஶங்கர பாஷ்யமும் அந்தராதிகரணம் முதலிய இடங்களில் பகவானுடைய விக்ரஹத்தின் இனிமையை விளக்கிற்று. ஸகுண ப்ரஹ்ம த்யாநத்தால் ஸகுண ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரமும், அவரோடு ஸாயுஜ்யமும், அதற்குப் பிறகு ஸம்ஸாரத்தில் திரும்பாமையும் ஸித்திப்ப தென்பது அவர் மதத்திலும் உண்டு. அவர்களுக்கும் அர்ச்சிராதி கதியும் அபுநராவ்ருத்தியும் உண்டு. ஸகுண ப்ரஹ்மாயத்தமாக அவர் அநுக்ரஹத்தால் அந்த உபாஸகர்களுக்கு ஸத்ய ஸங்கல்பத்வமும், ஈச்வராயத்தமாக யதேஷ்ட ஈச்வர சக்திகளு முண்டு. ஜகத் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரத்தில்மட்டும் அவர்களுக்கு ஆசையு மில்லை; அவர்கள் வ்யாபரிப்பது மில்லை.

“ஜகத்வ்யாபார வர்ஜம் — நித்யஸித்தேஶ்வராயத்தமேவ இதரேஷாம்
ஐஶ்வர்யம் யோஜயிதவ்யம் ததாயத்தைவம் ஸாராஜ்யப்ராப்தி
ஶ்ருதே। ஜகத்வ்யாபாரஸ்து நித்யஸித்தஸ்யைவ பரமேஶ்வரஸ்ய। தத:
பரமேஶ்வராயத்த தத் ஐஶ்வர்யமேதேஷாமிதி வ்யவதிஷ்டதே’

என்று கடைசியான ஜகத் வ்யாபாராதிகரணத்தில் ஸ்ரீ ஶாங்கர பாஷ்யம். ஸாலம்பந யோகத்தால் மனம் மிகவும் சுத்தமாகி, அதனுல் அந்த யோகத்தில் பகவான் திரும்பவும் திரும்பவும் ஸேவை ஸாதிக்கிறார். யத்யபி ப்ரபு:— ப்ரபுவாயிருந்தாலும், ‘நித்ராதிநாதிஹஸ்தை’ என்ற பழமொழி ச்லோகப் படி ஸாமாந்ய ப்ரபுவின் பேட்டியே கிடைப்பது கஷ்டம். அதிலும் அத்ருச்யமான ப்ரபு. அத்ருச்யரான இந்த ஜகத் ப்ரபு தம்மருளால் திரும்பவும் திரும்பவும் காணப்படுகிறார் என்று தயா ப்ரபாவ ரஸம். ப்ரஹ்மோபாஸநங்களில் பொதுவாக, ‘அஹம் க்ரஹம்’ என்றோர் விசேஷம் உபநிஷத்துக்களால் விதிக்கப்பட்டுளது. நான்கா மத்யாயம் நான்காம் பாதத்தில் ப்ரஹ்மோபாஸநத்தின்

ஸ்வரூபாதிகளைக் கூறுகையில், இரண்டாம் அதிகரணத்தில், '𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑌿 𑌤𑍂𑌪𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌗𑍍𑌰𑌾𑌹𑌯𑌨𑍍𑌤𑌿 𑌚' என்கிற ஸூத்ரத்தால் '𑌤𑍍𑌵𑌂 𑌵𑌾 𑌅𑌹𑌮𑌸𑍍𑌮𑌿 𑌦𑍇𑌵𑌤𑍇, 𑌅𑌹𑌂 𑌵𑍈 𑌤𑍍𑌵𑌮𑌸𑌿' [ஓ தேவதையே! நீயேயாக நான் உளன், நீயே நான் என்பதாக இருக்கிறாய்] என்று பொருள் உரைக்கக்கூடியது. '𑌤𑌦𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌸𑍋𑌽𑌸𑍌 𑌯𑍋𑌽𑌸𑍌 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑌿' [புலன்களுக்கும் மனத்திற்கு மெட்டாத அப்பரம புருஷர் யாரோ அவராகவே நானுளன்] என்று பொருளுரைக்கக்கூடியது. '𑌅𑌥 𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑍍𑌯𑍋𑌽𑌸𑌾𑌵𑌨𑍍𑌯𑍋𑌽𑌹𑌮𑌸𑍍𑌮𑍀𑌤𑌿 𑌨 𑌸 𑌵𑍇𑌦' [எவன் உபாஸ்ய பரதேவதையை 'அவர் வேறு நான் வேறு' என்ற புத்தியுடன் உபாஸிக்கிறானோ அவன் அறியாதவன்; ஸரியாக உபாஸிப்பவனல்லன்] என்று பொருள் படக்கூடியது. '𑌸 𑌯𑍋𑌽𑌤 𑌏𑌕𑍈𑌕𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌤𑍇 𑌨 𑌸 𑌵𑍇𑌦 𑌅𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑍋𑌽𑌤 𑌏𑌕𑍈𑌕𑍇𑌨 𑌭𑌵𑌤𑌿; 𑌆𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑍋𑌪𑌾𑌸𑍀𑌤; 𑌅𑌤𑍍𑌰 𑌹𑍍𑌯𑍇𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌕𑌂 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿' [எவன் ஒன்றொன்றைமட்டும் உபாஸிக்கிறானோ அவன் ஸரியாக உபாஸிப்பவனல்லன்; அவன் பூர்ணனல்லன். ஆகையால் அவன் ஒன்று ஒன்றோடுதான் கூடியவன். ஆத்மா (தான் அல்லது அந்தர்யாமியான உயிர்') என்றே உபாஸிக்கவேணும். இப்படி உபாஸித்தாலோ இங்கே எல்லாம் ஒன்று கூடிச் சேரும்; ஒன்றாகும்] என்று பொருளுரைக்கக் கூடியது. இந்த ச்ருதிகளைக்கொண்டும், பூம வித்யையில்,

'𑌅𑌥𑌾𑌤𑍋𑌽𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑍇𑌶𑌃 𑌅𑌹𑌮𑍇𑌵𑌾𑌧𑌸𑍍𑌤𑌾𑌤𑍍, 𑌅𑌹𑌮𑍁𑌪𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌤𑍍, 𑌅𑌹𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍, 𑌅𑌹𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍, 𑌅𑌹𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤𑌃 𑌅𑌹𑌂 𑌉𑌤𑍍𑌤𑌰𑌤𑌃 𑌅𑌹𑌮𑍇𑌵𑍇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍'

[பிறகு அஹங்க்ரஹத்தால் பூமா வென்னும் பரமாத்மாவினிடம் அஹங்க்ரஹமென்னும் அஹம் புத்தியை வைத்து உபாஸநம் உபதேசிக்கப்படுகிறது. எப்படியெனில்; நானே கீழெங்குமுளன். நான் மேலுமுளன். நான் பின்புறமுளன்; நான் முன்புறமுளன். நான் தெற்கேயுளன்; நான் வடக்கேயுளன்; காணுமிதுவெல்லாம் நானே. ஸர்வ திக்குகளிலும் ஸர்வத்திற்கும் ஆத்மாவாய் (உயிராயுள்ள) பூமா என்னும் பரமாத்மா நானே என்று அறியவேணும். உபாஸிக்கவேண்டும்.] என்று உபநிஷத் பாஷ்யத்திலும், ''இங்கே ஸர்வாத்மத்வம் உபதேசிக்கப்படுவது எதற்காகவென்றால், இப்படி அகண்ட விபூதி (பூமி) விசிஷ்டமான ப்ரஹ்மத்தை அஹங்க்ரஹத்தால் (அது நானே, அல்லது அதுவே நான்) என்ற புத்தியோடு உபாஸிக்கவேண்டுமென்று உபதேசிப்பதிலேயே கருத்து. ஏனெனில்: இங்கே '𑌅𑌥𑌾𑌤𑍋𑌽𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑍇𑌶𑌃' என்று அஹங்க்ரஹோபதேசத்தோடு தொடங்குவதால் இப்படிக் கொள்ளவேணும்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஹிந்து மதம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்.]

இக்காலத்திய சில தேசாபிமாநிகள், தமிழ் நாட்டில் வஸிக்கும் ப்ராஹ்மணர்கள் என்கிற ஒரு வகுப்பினர் வட இந்தியாவி லிருக்கும் ஸிந்து என்கிற நதிக் கரையிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தவர்க ளென்றும், அந்தக் காரணத்தினால் அவர்களை 'ஸிந்துக்கள்' என்று சொல்லவேண்டிய சப்தமானது நாளடைவில் 'ஹிந்துக்கள்' என்று உலக வ்யவஹாரத்தில், மாறி வந்துவிட்ட தென்றும், அக்காரணத்தால் ப்ராஹ்மணர்களுக்குத் தமிழ் நாட்டில் வாஸம் புதிதாக உண்டான தென்றும் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவது உண்மையாக விருக்குமானால், நம் தேசத்தில் வஸிக்கும் நான்கு வர்ணத்து ஜனங்களும் அநாதி காலமாக ஹிந்துக்கள் என்று வ்யவஹரிக்கப் படுவது விருத்தமாகும். ப்ராஹ்மணர்கள் தவிர மற்ற ஜனங்கள் ஸிந்து நதிக் கரையிலிருந்து வந்ததாக இவர்கள் ஒப்புக்கொள்ளாததினால், அவர்களையும் ஹிந்துக்கள் என்று அநாதி காலமாக வ்யவஹரிப்பது உசித மாகாதே. இங்கு ஸிந்து நதிக் கரையிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த ப்ராஹ்மணர்களோடு தமிழ் நாட்டில் வஸிக்கும் மற்ற ஜனங்களுக் குண்டான ஸஹவாஸத்தினால் 'ஹிந்து' என்கிற பெயர் மற்றவர்களுக்கும் பெயராகப் பரவிவிட்ட தென்று சிலர் சொல்வது உசிதமாகாது.

ப்ராஹ்மணர்கள் ஜனத்தொகையில் நூற்றுக்கு இருவர்தான் இருக்கிறார்கள். மற்றை மனிதர்கள் 98-பெயர்க ளிருக்கிறார்கள். அதிகமான பாலில் கொஞ்சம் ஜலம் கலக்கப்பட்டால் அல்பமான ஜலத்திற்கும் பால் என்கிற வ்யவஹாரம் ஏற்படுகிறதே யொழிய, அதிக பாலுக்கு ஜலம் என்கிற வ்யவஹாரம் ஏற்படக் கண்டதில்லை. அதைப்போல் ஸ்வல்ப ப்ராஹ்மணர்களுடைய ஸஹவாஸத்தினால் ஹிந்து என்கிற அவர்களுடைய பெயர் மிகவும் அதிகர்களான மற்றை ஜனங்களுக்கும் வந்து விட்டதாகச் சொல்வது அநுபவ விருத்த மாகையினால் உசிதமாகாது.

இது நிற்க: இந்தத் தேசத்திலும், மற்றும் தெலுங்கு தேசம் முதலிய எல்லாத் தேசங்களிலும், ப்ராஹ்மணர் அல்லாத பெரும்பாலாரான ஜனங்களிடத்திலும், இன்று வரையி லுள்ள தர்மாநுஷ்டாந விஷயத்திலும், தாய பாகம் முதலிய லௌகிக வ்யவஹாரங்களிலும், ப்ரமாணமாக 'ஹிந்து லா' என்று வெகு காலமாக வ்யவஹரிக்கப்படும் மநு ஸ்ம்ருதி யாஜ்ஞ்யவல்க்ய ஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களில் நான்கு வர்ணங்களையே குறித்துத் தர்ம கார்யங்களும் லௌகிக வ்யவஹாரங்களும் விதிக்கப்பட்டிருப்பதாலும், அதின்படியே

நமது தேசத்தில் நான்கு வர்ணத்தார்களும் அநாதி காலமாக அநுஷ்டித்து வருவதாலும், ஹிந்து என்கிற பெயர் ப்ராஹ்மணர்களுக்குமட்டும் ஏற்பட்டதல்ல வென்றும், நான்கு வர்ணத்தார்க்கும் பொதுவான தென்றும் ஏற்படுகிறது. ஆகவே ஸிந்து என்கிற சப்தம் ஹிந்து என்று மாறினதாகச் சிலர் சொல்வது உசிதமாகாது. ஆனால் இந்தியா தேசத்தில் பெரும்பாலு முள்ள ஜனங்களுக்கு ஹிந்து என்கிற பெயர் அநாதி காலமாக வழங்கப்படுவதற்குக் காரணம் என்னவெனில், அதை இங்கு நிரூபிக்கிறோம்.

நம் தேசத்தில் சார்வாக மதம், புத்த மதம், ஜைந மதம், காணக மதம், சைவ மதம், ஸாங்க்ய மதம், த்வைத மதம், அத்வைத மதம், விசிஷ்டாத்வைத மதம் போன்ற மதங்களைச் சொல்லுகிற சப்தங்கள் யாவும் ஸம்ஸ்க்ருத மொழிகளே. ஹிந்து மதம் என்கிற சப்தத்திலும் மதம் என்கிற சப்தம் ஸம்ஸ்க்ருத மொழியாக இருப்பதாலும், அதோடு சேர்ந்திருக்கும் 'ஹிந்து' என்கிற சப்தமும் ஸம்ஸ்க்ருத மொழியாக இருக்கவேண்டியதே உசிதமாகும். இந்த ஹிந்து சப்தத்தைக் கவனித்தால், வ்யாகரண சாஸ்த்ரத்தில் ப்வாதி கணம் என்பதில், 'ഹിവി ഗതൃനാശനയൊഃ' என்று 'போகுதல்' 'ப்ரிய மில்லாமை' என்கிற அர்த்தங்களில் 'ഹിവി' என்கிற தாது படிக்கப்பட்டிருக்கிறது. அந்த தாதுவின்மேல் 'സംജ്ഞാസു ധാതുരൂപാണി പ്രത്യയാശ്ച തതഃ പരേ' என்கிற விதியின்படி 'உ' என்கிற 'உணாதி' ப்ரத்யயம் சேர்க்கப்பட்டு, 'ഇദിതൊ നും—ധാതൊഃ' என்கிற ஸூத்ரத்தின்படி 'நும்' என்கிற ஆகமமும் வந்தால் 'ഹിണ്ഡു' என்கிற சப்தம் ஸித்திக்கிறது. இந்த 'ஹிண்டு' என்கிற சப்தமே உலக வ்யவஹாரத்தில் 'ஹிந்து' என்று கொஞ்சம் மாறுதலாகச் சொல்லப்படுகிறது. இதற்கு, 'போகிறவன்,' 'ப்ரிய மில்லாதவன்' என்பவை பொருளாகின்றன. இவ்வுலகத்தில் புத்திமான்களான மனிதர்கள் தாங்கள் வஸிக்கிற இடத்தில் பற்பல கஷ்டங்கள் நேர்ந்தால், அவைகளைத் தங்களால் நிவ்ருத்தி செய்ய முடியாத பக்ஷத்தில், அவர்கள் அந்த இடத்தை விட்டுக் கஷ்டமில்லாததும் ஸுகங்கள் காணப்படுகிற வேறு இடத்திற்குப் போக ஆஸ்தைப்படுவதைப் பார்க்கிறோம். அதைப்போலவே, இம்மண்ணுலகத்தில் வஸிக்கும் நமக்குப் 'பேதை பாலகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம், ஆதலால் பிறவி வேண்டேன்' என்கிறபடியே கர்ப்ப வாஸம் ஜந்மம் மரணம் முதலிய பற்பல கஷ்டங்கள் நம்மால் நிவர்த்திக்கமுடியாமலிருக்கின்றன. ஆகலால் அத்துன்பங்களை நன்கு கவனிக்கும் புத்திமான்களுக்கு இவ்வுல வாழ்க்கையில் ஆசையில்லாமையும், இப்படிப்பட்ட துக்கங்கள் இல்லாது மற்றும் பற்பல ஸுகங்களே நிறைந்திருக்கும் பற்பல உலகங்கள் இருப்பதாகவும், 'நான்' என்று சொல்லப்படுகிற ஆத்மா ஜந்மம் மரணம் இல்லாதவனாய் அவ்வுலங்களுக்குப் போய்த் துக்க லேச மில்லாமல் பற்பல பேரின்பங்களையும் அநுபவிக்க யோக்ய னென்று நமது ஹிந்து மத க்ரந்தங்களில் சொல்லப்படுவதால், அடி க்ரந்தங்களில் நம்பிக்கை யுள்ள புத்திமான்களுக்கு அப்படிப்பட்ட பரலோக ஸுகங்களில் ஆஸ்தையினால் அவ்வுலகங்களுக்குப் போக வேண்டிய முயற்சியும் உண்டாகலாம். ஆகையினால், அந்த மனிதனை 'ஹிண்டு' என்கிற சப்தம் சொல்லுகிறது.

ஆகவே ‘ஹிரீ’ தாதுவின் பொருளான ‘ப்ரியமில்லாதவன்’ என்பதற்குக் ‘கஷ்டங்களுக்கு இருப்பிடமான இவ்வுலக வாழ்க்கையில் ப்ரியமில்லாதவன்’ என்றும், ‘போகிறவன்’ என்பதற்குப் ‘பரலோகத்துப் பேரின்பங்களில் ஆசையினல் அங்குப் போகிறவன்’ என்றும் பொருள் சொல்லப்பட்டதாக ஆகிறது. இவ்விரண்டு அர்த்தங்களுக்குள் பரலோக ஸுகாநுபவத்தில் மனிதர்களுக்கு ஆசை விஞ்சியிருப்பதால், அதைத் தாதுவிற்கு முதற் பொருளாக ஶாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. இப்படி ஹிந்து சப்தத்திற்கு நாம் கூறிய பொருள் மிகவும் பொருத்தமாக இருக்கிறதென்கிற விஷயத்தை, அநாதிகாலமாக நமது தேசத்தை ஆண்டுவந்த அரசர்களும் மற்றும் அதிக தநவான்களும் தாங்கள் ச்ரமப்பட்டு ஸம்பாதித்த த்ரவியங்களையும் தேஹ ச்ரமங்களையும் பெரியனவாக நினைக்காமல், பரலோக ஸுகங்களுக்குக் காரணங்களான தர்ம சாலைகளையும் தடாகங்களையும் தேவாலயங்களையும் நிர்மாணம் செய்திருப்பதாலும், பசி தாஹங்களைப் பொறுத்துத் தமது வர்ணாச்ரம தர்ம கார்யங்களையெல்லாம் ச்ரத்தையோடு இன்று வரையில் அநுஷ்டித்து வருவதாலும் தெரிந்துகொள்ளலாம். தவிர: ப்ரத்யக்ஷத்தினல் அறிய முடியாததாய் நம் ஹிந்து மத சாஸ்த்ரங்களில் சொல்லப்படும் பாபம் என்கிறதற்குப் பயந்து தம் தம் இஷ்டப்படி அநுபவிக்கக்கூடிய பற்பல இவ்வுலகத்து ஸுகாநுபவங்களை இழந்து பல கஷ்டங்களையும் பொறுத்திருப்பதாலும் நன்கு அறிந்து கொள்ளலாம்.

இதைப்போலவே ஸகல ஹிந்து ஜனங்களாலும் தம்தம் தர்மாநுஷ்டாந விஷயங்களிலும் தாய விபாகம் முதலிய லௌகிக கார்யங்களிலும் முக்ய ப்ரமாணமாக அங்கீகரிக்கப்பட்ட மநுஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களில் இவ்வுலக வாழ்க்கையில் உள்ள விசேஷ தோஷங்களும் பரலோக ஸுகாநுபவங்களுடைய பெருமைகளும் உபதேசிக்கப்பட்டு, பரலோகத்தை அடையவேண்டியதே முக்யமாகச் சொல்லப்படுவதையும் இங்குத் தெரிவிக்கிறோம். மநுஸ்ம்ருதியில், முதலிலிருந்து ப்ராஹ்மணன் முதலிய நான்கு ஜாதிகளை ஈச்வரன் தன்னுடைய உடம்பில் முகம் முதலிய பாகத்திலிருந்து ஸ்ருஷ்டித்ததாகச் சொல்லி, அந்த நான்கு ஜாதிகள் அவச்யம் அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் சொல்லி, அந்த தர்மாநுஷ்டாநத்தால் உண்டாகக்கூடிய பயன்களையும் க்ரமமாகச் சொல்லியிருக்கிறது, அவற்றுள் முதலில் ப்ராஹ்மணன் அநுஷ்டிக்க வேண்டிய தர்மங்களைச் சொல்லி, அவைகளின் பலன்களைச் சொல்லுமிடத்தில்,

“ 𑌏𑌷 𑌵𑍋(𑌽)𑌭𑌿𑌹𑌿𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌃 ।

𑌪𑍁𑌣𑍍𑌯𑍋(𑌽)𑌕𑍍𑌷𑌯𑌫𑌲𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌰𑌾𑌜𑌧𑌰𑍍𑌮𑌂 𑌨𑌿𑌬𑍋𑌧𑌤 ॥ ”

[அத். 6; ச்லோ. 97]

என்கிற ச்லோகத்தில், ப்ராஹ்மணன் தன்னுடைய தர்மங்களை அநுஷ்டித்தால் இவ்வுலகத்தில் அதிகமான ஐச்வர்யம் உண்டாகுமென்றாவது, புத்ர பௌத்ராதிகளுண்டாகுமென்றாவது, இவ்வுலக வாழ்க்கைப் பலன்களைச் சொல்லாததோடு ‘𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌅𑌕𑍍𑌷𑌯𑌫𑌲𑌃’ என்று இறந்துபோன பிறகு பரலோகத்தில்

பெரிய பயன் வருவதாகச் சொல்வதாலும், அப்படியே க்ஷத்ரிய ஜாதி தர்மத்தை அநுஷ்டித்த க்ஷத்ரியனுக்கும்,

“ एवं सर्वानिमान् राजा व्यवहारान् समापयन्।
व्यपोह्य किल्बिषं सर्वं प्राप्नोति परमां गतिम्॥ ”

[அத். 9; ச்லோ. 420]

என்று பரலோகத்துப் பயனையே சொல்வதாலும், நாலாவது வர்ண தர்மங்களை அநுஷ்டிக்குமவனுக்குப் பலன்களைச் சொல்லுமிடத்திலும், ‘ब्राह्मणाद्याश्रयो नित्यमुत्कृष्टां जातिमश्नुते’ [அத். 9; ச்லோ. 335] என்று உயர்ந்த ஜாதியில் பிறப்பதையே பலனாகச் சொல்வதாலும், மேல் நான்கு ஜாதிகளுக்கும் ஆபத் தர்மங்களைச் சொல்லுமிடத்திலும்,

“ एते चतुर्णां वर्णानामापद्धर्माः प्रकीर्तिताः।
यान् सम्यगनुतिष्ठन्तो व्रजन्ति परमां गतिम्॥ ” [அத். 11, ச்லோ. 130]

என்று பரலோகத்தையே பலனாகச் சொல்வதாலும், அப்படியே,

“ ब्रह्मचारी गृहस्थश्च वानप्रस्थो यतिस्तथा।
एते गृहस्थप्रभवाश्चत्वारः पृथगाश्रमाः।
सर्वेऽपि क्रमशस्त्वेते यथाशास्त्रं निषेविताः।

यथोक्तकारिणं विप्रं नयन्ति परमां गतिम्॥ ” [அத். 6; ச்லோ. 87]

என்று நாலு ஆச்ரம தர்மங்களுடைய அநுஷ்டாநத்திற்கும் பரலோகத்துப் பயனையே பலமாகச் சொல்வதாலும் இது வ்யக்தமாகிறது. இதற்குமேல் இவ்வுலக வாழ்க்கையிலுள்ள தோஷங்களை யெல்லாம் இங்கு வைராக்யம் உண்டாவதற்காக,

“ विप्रयोगं प्रियैश्चैव संयोगं च तथाप्रियैः।
जरया चाभिभवनं व्याधिभिश्चोपपीडनम्॥ ”

[அத். 6; ச்லோ. 62] என்பதாலும்,

“ संभवांश्च वियोनीषु दुःखप्रायासु नित्यशः।
शीतातपाभिघातांश्च विविधानि भयानि च।
असकृद्गर्भवासेषु वासं जन्म च दारुणम्।
बन्धनानि च कष्टानि परप्रेष्यत्वमेव च।
बन्धुप्रियवियोगांश्च संवासं चैव दुर्जनैः।
द्रव्यार्जनं च नाशं च मित्रामित्रस्य चार्जनम्।
जरां चैवाप्रतीकारां व्याधिभिश्चोपपीडनम्।
क्लेशांश्च विविधांस्तांस्तान्मृत्युमेव च दुर्जयम्॥ ”

[அத். 12; ச்லோக. 77]

என்பதாலும் வ்யக்தமாகக் காட்டி மனிதர்களுக்குத் தேஹத்தில் போக்யத்வ புத்தி நாச மடைவதற்காகத் தேஹத்திலிருக்கும் தோஷங்களையும்

“ 𑌅𑌸𑍍𑌥𑌿𑌸𑍍𑌥𑍂𑌣𑌂 𑌸𑍍𑌨𑌾𑌯𑍁𑌬𑌦𑍍𑌧𑌂 𑌮𑌾𑌂𑌸𑌶𑍋𑌣𑌿𑌤𑌲𑍇𑌪𑌨𑌮𑍍 ।
𑌚𑌰𑍍𑌮𑌾𑌵𑌨𑌦𑍍𑌧𑌂 𑌦𑍁𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌿 𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌮𑍂𑌤𑍍𑌰𑌪𑍁𑌰𑍀𑌷𑌯𑍋𑌃 ।
𑌜𑌰𑌾𑌶𑍋𑌕𑌸𑌮𑌾𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 𑌰𑍋𑌗𑌾𑌯𑌤𑌨𑌮𑌾𑌤𑍁𑌰𑌮𑍍 ।
𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌮𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌚 𑌭𑍂𑌤𑌾𑌵𑌾𑌸𑌮𑌿𑌮𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ” [அத். 6; ச்லோ; 76]

என்பதாலும் வ்யக்தமாகச் சொல்லி, இப்படிப்பட்ட துக்கங்களைப் போக்கிக் கொள்வதற்குத் தர்மாநுஷ்டாநமே முக்யமான மருந்தென்றும், ஆகையினல் அதை விட்டுவிடாமல் அவச்யம் அநுஷ்டிக்கவேண்டு மென்கிற விஷயத்தை

“ 𑌧𑌰𑍍𑌮 𑌏𑌵 𑌹𑌤𑍋 𑌹𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌰𑌕𑍍𑌷𑌤𑌿 𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑍋 𑌨 𑌹𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌮𑌾 𑌨𑍋 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌹𑌤𑍋𑌵𑌧𑍀𑌤𑍍 ।
𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌰 𑌹𑌿 𑌸𑌹𑌾𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑌿𑌤𑌾 𑌮𑌾𑌤𑌾 𑌚 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌃 ।
𑌨 𑌪𑍁𑌤𑍍𑌰𑌦𑌾𑌰𑌾 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌤𑌿𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌕𑍇𑌵𑌲𑌃 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌂 𑌸𑌹𑌾𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌂𑌚𑌿𑌨𑍁𑌯𑌾𑌚𑍍𑌛𑌨𑍈𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌹𑌿 𑌸𑌹𑌾𑌯𑍇𑌨 𑌤𑌮𑌸𑍍𑌤𑌰𑌤𑌿 𑌦𑍁𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ”

என்று வ்யக்தமாகச் சொல்லி, இந்த தர்மங்களை அநுஷ்டிக்க வேண்டிய முறைகளையும் ஸர்வேச்வரன் கொடுத்த தேஹேந்த்ரியங்களைக் கொண்டு அவனுடைய ஆராதந ரூபமாக அநுஷ்டிக்கவேண்டு மென்பதற்காகக் கடைசியில்,

“ 𑌪𑍍𑌰𑌶𑌾𑌸𑌿𑌤𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌅𑌣𑍀𑌯𑌾𑌂𑌸𑌮𑌣𑍀𑌯𑌸𑌾𑌮𑍍 ।
𑌰𑍁𑌕𑍍𑌮𑌾𑌭𑌂 𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑌧𑍀𑌗𑌮𑍍𑌯𑌂 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑌰𑌮𑍍 ॥ ”

என்று ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப குணங்களையும் சொல்லி, இப்படி அவனை ஆராதித்தால் நாம் அடையவேண்டிய பலம் ஸர்வ துக்க நிவ்ருத்தி பூர்வகமான பரம புருஷ ஸாயுஜ்ய மென்பதை,

“ 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑍇𑌷𑍁 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌅𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌷𑍁 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌯𑍋𑌗𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌪𑍍𑌯𑍇𑌤𑌿 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍 ”

என்று முடிப்பதால், பரலோக பலத்தையே முக்யமாகச் சொல்லுகிறது ஹிந்து மத க்ரந்தமான மநுஸ்ம்ருதி.

ஆகவே, ஹிந்து என்கிற சப்தத்தின் பொருளான ‘இவ்வுலக வாழ்க்கையில் ஆசையில்லாமல் பரலோக ஸுகங்களையே விரும்பியிருத்தல்’ என்கிற விஷயமே ஹிந்து மத க்ரந்தமான மநு ஸ்ம்ருதி முதலிய க்ரந்தங்களினல் சொல்லப்படுகிற தென்பதை இங்கு வ்யக்தமாகக் காட்டினேம்.

[தொடரும்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

—:0:—

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜெண்டுகள் காபி 1-க்கு 4 அணு வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும். ...ர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபய வேதாந்த ஜககண்ட்யம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உ.வே. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

கபிலர் ருஷியாய்ப் பிறந்து, யோகியாய், யோக தசையில் இருபத்தைத்தாவது தத்வ மென்கிற ஜீவ ஸ்வரூப தத்வம் மட்டும் காணப்படுகிற தென்றும், அதற்கு மேற்பட்ட தத்வம் யோகக் கண்ணுக்குத் தெரியாததால், 'யோக்யாநுபலப்தி' என்கிற ந்யாயப்படிக்கு 'அபாவ ப்ரமாணத்தால் ஈச்வரன் என்ற தத்வமே புலப்படாததால் ஜகத்காரணம் ப்ரக்ருதி யல்ல, ஈச்வரன்தான் என்று சொல்வதற்கு இடமில்லை' யென்றும் ஸாங்க்யர் கக்ஷி. இக்கக்ஷிகளை இரண்டாம் அத்யாயத் தொடக்கத்தில் ஸ்ம்ருத்யதிகரணத்தில் இரண்டாம் ஸூத்ரத்தில் 'ஸநவகாச' என்கிற பதத்தில் த்வநிக்கிறபடி கபில ருஷி ப்ரணீதமான அதீந்த்ரிய தத்வ ஸாக்ஷாத்கார பூர்வக ஸ்ம்ருதி நிபந்த ப்ரமாணத்தினாலும், ஸாங்க்ய மத பூர்வபக்ஷம் செய்யப்படுகிறது. அதற்கு மேல் அங்கே இரண்டாம் பாதத்தில் முதல் அதிகாணத்தில் கேவல யுக்திகளைக் கொண்டு ஸாங்க்ய மத நிராகரணம் செய்யப்படுகிறது. இங்கே சாஸ்த்ரத் தொடக்கத்தில் நிரீச்வர ஸாங்க்யர்கள் இந்த ஸத்வித்யா ச்ருதிக்கே மூல ப்ரக்ருதி என்னும் ஸத்தை ஜகத் காரணமாக உபபாதிப்பதில் கருத்து என்று செய்யும் பூர்வபக்ஷம் தள்ளப்படுகிறது. இங்கே முதல் ஸூத்ரத்தில் "ஸத்வித்யையில் சொல்லப்படும் ஸத் என்னும் காரணம் ஸாங்க்யர்கள் அநுமானத்தால் ஸாதிக்கும் ஸூக்ஷ்ம ஜட ப்ரக்ருதி யல்ல; ஏனெனில், 'ததைக்ஷத பஹுஸ்யாம்' [அந்த ஸத்து பார்த்தது; நினைத்தது, நான் அநேகமாக விரியக்கடவேன்] என்று ஸங்கல்பித்துப் பிறகு ஸ்ருஷ்டித்தது என்று சொல்லியிருக்கிற ஹேதுவால்" என்று கூறப்பட்டுள்ளது. "மனனக மலமற மலர்மிசை யெழுதரும் மனனுணர் வளவிலன்" என்பதற்கு, 'மனதை மேல் மேல் சுத்தமும் ஸூக்ஷ்மமு மாக்கி, கேவலமான சுத்த ஜீவ ஸ்வரூபத்தைமட்டும் காணக்கூடு மானாலும் 'யதோவாச:' என்ற ச்ருதிப்படிக்கு மனத்தினால் அளவிடக்கூடாத ஆநந்தமான ப்ரஹ்ம ஸ்வரூபம் ஈச்வராநுக்ரஹ வீக்ஷண மில்லாத கேவல யோக உணர்வினால் காணக்கூடிய தல்ல வென்றும் ஒரு பொருள். ஜீவ ஸ்வரூபம் ப்ரஹ்மத்தைப்போல் அளவிடக்கூடாத தல்ல. இதனால் யோகக் கண்ணால் காரண தத்வத்தைப் பார்த்துவிடலா மென்றும், அக்கண்ணுக்குப் புலப்படும் ஜீவ ஸ்வரூபத்திற்கு மேற்பட்ட ஓர் விச்வாத்ம தத்வ மில்லை யென்றும் சொல்லும் ஸாங்க்ய பக்ஷம் ஸரியல்ல வென்று ஸூசிக்கப்படுகிறது. மனதின் வலிமையால் மேல் மேலும் ஸ்வபுத்தியால் தோன்றியபடி யுக்திகளை மாற்றி மாற்றிப் புதிதாகக் கல்பனையும் பரிஷ்காரமும் செய்து,

தங்கள் பிடிவாதத்தை ஸாதிக்க முயல்வது அநுமாந தர்க்காதி யுக்தி வாதத்தின் ஸ்வபாவம். இதை,

'தகு॰ரவூ॰திஷா நாக' 'ளு நஞ்யா ந॰॰ஜெயவிதிமெஷெவஉவதீ நிமெ॰ராகூவூவாஜ॰:'

என்கிற ஸூத்ரங்களும் அவற்றின் பாஷ்யமும் நன்கு விளக்குகின்றன. எதிர் வாதிகள் காட்டும் 'மல' மென்னும் தோஷங்களை மேல்மேல் பரிஷ்கரித்து யுக்தி கோடி சொல்வர். தமிழில் அளவு என்பது ப்ரமாணத்தைக் குறிக்கும். மனத்தினால் மேல்மேல் ஆலோசித் தாலோசித்துப் பரிஷ்காரஞ் செய்து கோடிகள் கல்பிப்பது அநுமாந ப்ரமாணத்தைக்கொண்ட வாதத்திற்கு ஸஹஜ மானதால், இங்கே 'அளவு' என்பது அநுமாந ப்ராமாணத்தையும் அநு மாந ஸாத்யமான ஆநுமாநிகத்தையும் குறிக்கும். இங்கே முதல் ஸூத்ரத்தில் 'ஐஶஸூழ' என்பதற்கு 'ஆநு॰ாநிகழ' என்பது பொருள் என்று ஸ்ரீ பாஷ் யம். ஆநுமாநிக மென்றே மூல ப்ரக்ருதியை ஸாங்க்யர் வ்யவஹரிப்பர். இங்கே ப்ரஹ்ம ஸூத்ரத்தில் 'ஆநுமாநம், அநுமாநம், ஆநுமாநிகம், ஸ்மார்த் தம்' என்பவை ஸாங்க்யருடைய மூலப்ரக்ருதியைக் குறிக்கும் ஶப்தங்கள். இங்கே 'ஐஶஸூ॰ம்' என்பதற்கு 'ஆநுமாநிகம்' 'ஆநுமாநம்' என்ற பொருள்க ளுள்ளதை 'மனனுணர் வளவு' என்பதால் ஆழ்வார் ஸூசிக்கிறார். 'நாஉஶஸூ॰ம்' என்ற ஸூத்ர பதங்களுக்கு 'ஸாங்க்யர் அநுமாந அளவி லகப்படாத' தென்று பொருள். 'மனனுணர் வளவிலன்' என்று அவ்விரண்டு பதங்களின் பொருளைக் காட்டுகிறார். '௦ஶ௦கூதெ:' என்பது பரமாத்மாவின் ஈக்ஷணத்தைச் சொல்லு கையில், 'யமெவெஷவுண॰தெ' என்ற ச்ருதிப்படி, அவன் ப்ரேம வீக்ஷணம் செய்து வரித்தாலல்லது அவன் ஸ்வரூபத்தைக் காணமுடியா தென்றும், இந்தப் பாசுர அடியில் சொல்லப்பட்ட உபர்யுபரி விஜ்ரும்பமாணமான கேவல யோக உணர்வினலாவது அநுமாந உணர்வினலாவது அறியக்கூடாதவன் என்பதையும் ஸூத்ரகாரர் ஸூசிக்கிறார். 'தஹிஷஹ॰ஜொகெஷாவதெஶாக' என்கிற ஸூத்ரம், ப்ரக்ருதி நிஷ்டனுக்கு மோக்ஷம் ஸித்தியாததுபோல் கேவல ஜீவ ஸ்வரூப நிஷ்ட னுக்கும் ஸாங்க்யர்கள் மோக்ஷம் ஸித்திப்பது ஒவ்வா தென்பதையும் ஸூசிக் கும். 'ஸூாவ॰யாக' என்கிற ஸூத்ர மிங்கே, 'ஸாவ॰ழ' என்று சொல்லப்படும் நித்ராவஸ்தையில் ஜீவன் 'ஸத்' என்னும் காரணத்தில் 'ஸதிஸ௦வஷதீ' என்று லயிப்பதாகச் சொல்லப்படுவதால், ஸாங்க்யர்கள் பக்ஷப்படிக்கும் ஜீவர்களுக் குக் காரண மல்லாத ப்ரக்ருதியில் ஜீவர்கள் லயித்துத் தூங்குவதாகச் சொல் லுவது ஒட்டா தாகையாலும், சேதநனுக்கும் சேதநனை பரமாத்மாதான் லயிக்கக்கூடிய மூலப்பொருள் என்பது ஸம்பவிக்கலா மாகையாலும், இங்கே ஜீவனுக்கு லயிக்கும் இடமாகச் சொல்லப்பட்ட 'ஸத்' பரமாத்மாதான் என்று நிர்ணயிக்கப்படுகிறது. 'ஸூ௦ஹ॰வீதொஉவகி' என்ற விடத்தில் 'ஸ்வம்' என்பதற்குத் 'தன்னை' என்று பொருள்கொண்டு, சரீராபிமாந மன்றியில் ஶரீர ஸம்பந்த மற்றதுபோல் ஶரீர வியுக்த கேவலாத்ம ஸ்வரூபனாகி, அந்த ஶரீர வியுக்த கேவலாத்ம ஸ்வரூப நிலையில் ஸத் என்னும் பரமாத்மாவினிடத்தில் வேற் றுமை யற்ற தன்னையும் மறப்பது போலுள்ள அவிபாகக் கலவியை யடைகிறா னென்றும், ஸுஷுப்தி விஷயமான ஸகல ச்ருதிகளும் ஏகரூபமாய்க் கூறு கின்றன. 'ஸ்வம்' என்னும் தன் கேவல ஸ்வரூபமாகியும், 'ஸத்' என்னும்

பரமாத்மாவிற்குள் 'ஸம்பத்தி' என்னும் லயம் அடைவதாக, 'ஸதிஸம்பத்ய, ஸதாஹிஸம்பந்ந:' என்று அங்கேயே ச்ருதி கூறிற்று. அக்காலத்தில் தேஹம் மனது இந்த்ரியங்கள் இவற்றின் ஸம்பந்தங்கள் நீங்கி யிருக்கும் 'ஸ்வம்' என்னும் ஜீவனுடைய கேவலாத்ம ஸ்வரூபத்தை ப்ரக்ருதி வியுக்த மாக வடைந்து, 'ஸத்' என்றும் 'ப்ராஜ்ஞ ஆத்மா' என்றும் 'தேஜஸ்' என்றும் சொல்லப்படும் பரமாத்மாவிற்குள் இருக்கிறான் என்றும், அவனே இவன் ஆத்ம ஸ்வரூபத்திற்குப் 'பர்யங்க' மென்னும் சயநாதாரமாக இருக்கிறானென்றும் ஸர்வ ச்ருதி ஸூத்ர ப்ரஸித்தம். அத்வைத பாஷ்யாதிகளில் பலவிடங்களில் இப்படி ச்ருதி ஸூத்ரப் பொருள்களுரைக்கப்படுகின்றன. த்வைத க்ரந்தங்களிலும் அப்படியே. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்

[ஸ்ரீ. உப. திருப்பூருந்துருத்தி. V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி,
மேல் மாம்பலம்]

சென்றதை மாஸத்து ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகையில், நம் ஸ்ரீ அழகிய சிங்கர் செய்தருளிய சில விசேஷ உபகாரங்களைப்பற்றி அநுஸந்தித்தோம். ஸ்ரீ அழகிய சிங்கருடைய பல திறப்பட்ட உபகாரங்களில், அவர் ப்ரதி வர்ஷமும் கூட்டும் 'மாலோல வித்வத் ஸதஸ்' மிகவும் முக்யமானது. சென்றதை மாஸமும் இந்த வித்வத் ஸதஸ் வழக்கம்போல் கூடி அமோகமான சிறப்புடன் நடந்து நிறைவேறியது.

இந்த வர்ஷம், இந்த வித்வத் ஸதஸ்ஸுக்கு அவச்யம் போய்வர வேண்டுமென்றும், அங்கு நடக்கும் மஹோத்ஸவ வைபவங்களை யெல்லாம் ஸேவித்து மகிழவேண்டு மென்றும் அடியேன் மிகவும் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தேன். நமது ஸம்ப்ரதாயக் கல்வியில் தலஸ்பர்ஸிகளாக இருக்கும் பெரிய வித்வான்களெல்லாம் ஒரே இடத்தில் ஏககாலத்தில் குழுமியிருக்கும் ஆச்சர்யத்தைக் கண்களார ஸேவித்து மகிழ மிகவும் நல்ல ஸந்தர்ப்பம் கிடைத்ததென்றும் நினைத்து ஸந்தோஷித்துக்கொண்டிருந்தேன். ஆயினும், என் ஸந்தோஷம் நிலையற்றதாகிவிட்டது. ஏனெனில்: பகவத் ஸங்கல்பம் வேறு விதமாக இருந்தது. கடைசி நிமிஷத்தில் சில அநுபபத்திகள் ஏற்பட்டு, அடியேன் திருவெவ்வுளூருக்குச் செல்ல முடியாமல்போய்விட்டது. ஆயினும், திருவெவ்வுளூருக்குச் சென்று ஸ்ரீ அழகிய சிங்கரை ஸேவித்துவிட்டு வந்த ஸ்வாமிகளையாவது கேட்டு, அங்கு நடந்த வைபவங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்பினேன். ஒரு ஸ்வாமியிடம் சென்று கேட்டேன். அவர் சொல்லவும் சொன்னார்.

ஸ்ரீ வேதாந்த தேசிகன் தம்முடைய தமிழ்ப்ரபந்தம் ஒன்றில், மிகவும் அழகான ஒரு பாசுரம் அருளிச்செய்துள்ளார். அது பின்வருமாறு:—

“வெற்புட னென்றி யயிந்தையில் வெவ்வினை தீர்மருந்தோன்
றற்புதமாக வமர்ந்தமை கேட்டருள் வேண்டிநிற்கப்
பற்பில மர்ந்தசெய் யாள்படி காட்டிய பண்புடையெம்
விற்புரு வக்கொடிக் கோர்விலங் காமயல் பெற்றனமே.”

இது மிகவும் அத்புமான ஒரு பாசுரம். இதன் கருத்து பின்வருமாறு:—ஓர் இளம்பெண் இருந்தாள். அவள் எப்போதும் எதையோ நினைத்துக்கொண்டு அழுதுகொண்டும், அலற்றிக்கொண்டும், மயங்கிக்கொண்டும், மூர்ச்சையடைந்துகொண்டும் வருந்தினாள். இவ்வாறு அவள் வருந்துவதன் காரணம் ஒருவருக்கும் தெரியவில்லை. இதைக் கண்ட அந்தப் பெண்ணின் தாயார் மிகவும் கவலையடைந்தாள். அவள், “அந்தோ! நான் ஒரு பெண்ணைப் பெற்றேன்; அவளைத் திருமகள்போலவும் வளர்த்தேன். அவள் இப்படிப் பேதுற்றுக் கிடக்கிறாளே! நான் என்ன செய்வேன்?” என்று ஏங்கினாள். தன்னால் முடிந்த வரையில் சிந்தித்தும் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. கடைசியில் அவள் அண்டையயலிலிருந்த வயதான தாய்மார்களிடம் சென்று, அவர்களிடம் தனது வருத்தங்களையெல்லாம் வாய்விட்டுச் சொன்னாள். அவள் சொல்வதைக்கேட்டாள் அனுபவம் மிகுந்த ஒரு வ்ருத்தை. கேட்டதும் அவளுக்கு மனது மிகவும் இரங்கிவிட்டது. அவள் அந்தப் பெண்ணின் தாயைத் தேற்றி, அவளுக்குத் தான் அனுபவ ஸித்தமாகக் கண்டறிந்த ஒரு மருந்தைப்பற்றிச் சொன்னாள். அவள் கூறினாள்:—“அம்மா! நீ ஏன் இப்படிக் கவலைப்படுகிறாய்? கவலைப்பட இதில் ஒன்றுமே இல்லை. இதோ வெகு அருகில் ஸர்வ ரோகங்களுக்கும் ஸஞ்சீவியைப்போன்ற மருந்து ஒன்று இருக்கிறது. அதை ஸேவித்தால் உன் பெண்ணின் மயக்கம் பறந்தோடிப்போகும். உனக்குத்தான் தெரியுமே மாமலையில் உள்ள மருந்து பிணி தீர்க்கும் என்று. திருவஹீந்த்ரபுரத்தில் ஔஷத கிரியில் தான் நான் சொல்லுகிற அத்புதமான பச்சை இலைபோன்ற திவ்யௌஷதம் இருக்கிறது. அது உன் பெண்ணின் மயக்கம் மட்டும் இல்லை; வேறு எப்படிப்பட்ட கடுமையான கர்ம வ்யாதி இருந்தாலும் அதையுங்கூடப் போக்கிவிடும். நீ உன் பெண்ணை அங்கே அழைத்துக்கொண்டுபோய் அந்த மருந்தை ஸேவிக்கச் சொல். அவள் மயக்கம் நீங்கி ஸ்வஸ்தம் ஆகிவிடுவாள். இது வொரு கைகண்ட மருந்து. நான் சொல்லுகிறேனே என்று பார்” என்றாள். இதைக் கேட்ட அந்தப் பெண்ணின் தாயார், தன் பெண்ணையும் அழைத்துக்கொண்டு திருவஹீந்த்ரபுரம் சென்றாள். அங்கு ஔஷத கிரியின்மேல் அவள் நாடிவந்த அந்த மருந்து தேதீப்யமாக ப்ரகாசித்துக்கொண்டிருந்தது. அதைக் கண்டவுடனேயே பெண்ணின் மயக்கம் போய்விட்டது. அவளுடைய அழுகையும் அரற்றலும் நீங்கிவிட்டன. இதைக் கண்ட அவள் தாயார் முதலில் மிகவும் ஸந்தோஷம் தான் அடைந்தாள். ஆனால் அந்த ஸந்தோஷம் நீடிக்கவில்லை. அவள் தன் பெண்ணைத் திரும்பி வீடு போவதற்காக அழைத்தபோது அவள் பரவசமாக நின்றுகொண்டிருந்தாள். தான் என்றும், வீடு வாசல் என்றும், எல்லா

வற்றையும் மறந்து ஒரு மோன நிலையில் நின்றுகொண்டிருந்தாள் அவள். தாயார் வீட்டுக்குப் போக அழைக்கிறுளென்றும், அவளோடு தானும் போக வேண்டுமென்றும் அவளுக்குத் தோன்றினல்தானே! அப்போதுதான் தாயாருக்கு உண்மை நிலை புலனாயிற்று. "அந்தோ! முன்னெல்லாம் பெண்ணுக்கு அடிக்கடி மயக்கம் வரத்தான் வந்தது. ஆனல் அது சிறிது நேரம்தான் இருக்கும். பிறகு போய்விடும். ஆனல் இப்போது பெண்ணுக்கு விலங்காத பெரும் மயலல்லவா உண்டாகிவிட்டது? முன்னெல்லாம் அவளுக்குப் பரவசமான நிலை யுண்டாகவில்லை. ஆனல் இப்போது அவள் தனக்கு வீடு வாசல் உள்ளதென்பதையும், தான் அங்குப் போகவேண்டுமென்பதையு மல்லவா மறந்துபோய் நிற்கின்ருள்! தாயாருக்கு மிகுந்த கவலை யுண்டாகிவிட்டது. அவள் யத்ருச்சையாக அந்தத் திவ்யௌஷதத்தை மறுபடியும் உற்று நோக்கினள். உடனே அவள் முகத்தில் பாவம் மாறியது. என்? முன் கவலை மாத்ரம் தோன்றிய முகத்தில் இப்போது ஆச்சர்யமும் கூடத் தோன்றுகிறது. அங்கே என்ன ஆச்சர்யத்தைக் கண்டுவிட்டாள் அவள்? ஆம்! அவள் ஒரு ஆச்சர்யத்தைத்தான் கண்டாள். அந்த ஔஷதத்தின் அருகில் வருகிறவர்கள் எல்லார் பாடுமே அவளது பெண் பட்ட பாடாக இருப்பதைத்தான் கண்டாள். "தாமரைப் பூவில் அவதரித்த பெரிய பிராட்டியார் இந்த மருந்தை ஸேவிக்க வந்தவர், இந்த மருந்தின் மயக்கத்தில் அகப்பட்டுக்கொண்டு, தமது பிறந்தகத்தை முற்றிலும் மறந்துபோய் இதோ பேதுற்று நிற்கிருரே! இவர் பாடே இப்படியானல், பிச்சேறி நிற்கும் அபலைப் பெண்ணுகிய என் பெண்ணைப்பற்றி என்ன சொல்லக் கிடக்கிறது?" இத்தகைய சிந்தனைச் சுழலில் அகப்பட்டுத் தாயார் இரங்குகிருள்.

ஔஷத கிரியில், பவ வ்யாதிக்கு ஒப்பற்ற ஒரு திவ்யௌஷதமாக விளங்கும் தேவநாதன், தம்மை ஸேவிப்பவர்களின் கர்ம ஸம்பந்தத்தை அறவே அழித்துவிடுகிருர். ஆனல், அவர் தமது திவ்ய ஸௌந்தர்யங்களால் பெரிய பிராட்டியாருக்கு எவ்வளவு வ்யாமோஹத்தை உண்டுபண்ணுகிருரோ, அவ்வளவு வ்யாமோஹத்தைத் தம்மை ஸேவிக்க வரும் ஒவ்வொருவருக்கும்தான் உண்டாக்கி விடுகிருர். ஒவ்வொருவரும் மெய்ம்மறந்து எம்பெருமானுடைய திவ்ய ஸௌந்தர்யத்தில் லயித்துவிடுகிருர்கள். இதுதான் ஸ்ரீ தேசிகன் அருளிய பாசுரத்தின் கருத்து.

ஸ்ரீ அழகிய சிங்கர் கூட்டியருளிய வித்வத் ஸதஸ்ஸின் வைபவத்தையும் திருநக்ஷத்ர மஹோத்ஸவ வைபவங்களையும் அந்த ஸ்வாமி வர்ணிக்கக் கேட்ட அடியேனுக்கும், வ்யாமோஹத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக ஔஷத கிரிக்குச் சென்ற நாயகி, அங்கு விலங்காத வ்யாமோஹத்தை யடைந்த கதையாக, திருவெவ்வுளூருக்குப் போகாததால் ஏற்பட்ட தாபம், இத்தகைய ஆநந்தாநுபவத்தை இழந்துவிட்டோமே என்று அறிந்ததால் பன்மடங்கு அதிகமாகிவிட்டது. அந்த ஸ்வாமி அங்கு நடந்த வைபவங்களை அத்யாச்சர்யமாக வர்ணித்தார். ஆழ்வார் நித்ய ஸூரிகளின் கூட்டத்தைக் கண்டு பரவசமாகி அவர்களைப் 'பொலிக பொலிக பொலிக' என்று மங்களாசாஸநம் பண்ணியருளி

ஞர் அல்லவா! அந்த நித்ய ஸூரிகளின் கூட்டத்தையே நிகர்த்திருந்தது, திருவெவ்வுளூரில் மாலோல வித்வத் ஸதஸ்ஸை அலங்கரித்த மஹான்களின் ஸமுதாயமும். இந்த வித்வத் ஸதஸ் பெரிய மஹோத்ஸவமாகப் பத்து நாள் வரையில் நடந்தது. தினமும் காலையில் பெரிய பெருமாளுக்கு அபிகமநத் திருவாராதநம் நடந்ததும் ஸதஸ் கூடியது. காலையில் இரண்டு அல்லது மூன்று மணி அவகாசம் நடந்தபிறகு, ஸாயங்காலம் மறுபடியும் கூடியது. அப்போது மூன்று மணி நேரம் நடந்தது. அங்கு ஸ்ரீமத் அழகிய சிங்கர் ஸந்நிஹிதராக எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ ஸந்நிதியின் ஆஸ்தான மஹா வித்வத் பீடத்தை அலங்கரித்தருளும் ஸ்ரீமத் புத்தங்கோட்டகம் ஸ்வாமி அங்கு ப்ரதான புருஷராக விளங்கினர். குழுமியிருந்த வித்வந் மணிகளெல்லாம், சாணையிலிட்ட மாணிக்கம்போல ஞான தேஜஸ்ஸினால் ஜ்வலித்தார்கள். வித்வான்கள் சற்றேறக்குறைய நூற்றைம்பது திருநாமங்கள் வாதங்களில் கலந்துகொண்டார்களாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதை மிகவும் ஆச்சர்யகரமாக வாதித்தார்களாம்.

ப்ரபந்நர்கள் இங்கிருந்த நாள் வரையில் செய்யவேண்டிய கார்யங்களில் முக்யமானது ஸ்ரீ பாஷ்யத்தைப் படித்துப் ப்ரவர்த்திப்பித்தல். இதை எல்லாருக்கும் புரியும்படியாகச் சொன்னால், ஸ்ரீமத் விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தைத் தேசம் முழுவதும் பரவச்செய்தல் என்று சொல்லலாம். ப்ரபந்நன், தனக்கு ஆத்மோஜ்ஜீவநத்துக்கான உபாயத்தை அநுஷ்டித்தாயிற்றென்றும், இனி மற்றவர்கள் என்னவானாலும் தனக்கு அக்கரையில்லையென்றும் இருக்கக்கூடாது. அவன், தான் அடையப்போகும் ஒப்பற்ற பேற்றை, தன்னைப் போல் எல்லாருமே அடையட்டுமே என்கிற விசாலமான உள்ளத்தோடு, ஸம்ப்ரதாய அர்த்தங்களைக் கேட்பவர்களுக்கெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டும். இதுதான் ஸ்ரீ பாஷ்யகாருடைய திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பான தொண்டு. இத்தகைய ஸ்ரீ பாஷ்ய ப்ரவசநத் தொண்டில், ஸ்ரீமத் அழகியசிங்கர் மிகவும் ஈடுபட்டுள்ளார். எனவே, இந்த ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்ஸின் அவகாசம் முழுவதும், ஸ்ரீ பாஷ்யத்தில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களின் சர்ச்சையிலேயேதான் ஈடுபட்டிருந்ததென்று சொல்லவேண்டுமோ?

பரிகணிதர்களான வித்வான்கள் எல்லாரும் ஸ்ரீ பாஷ்யத்தில் ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ள விஷயங்களில் ஸந்தேஹத்துக்கோ அல்லது விபரீதமான அர்த்த கல்பநத்துக்கோ ஆஸ்பதமாக இருந்த இடங்களில் விஷயங்களை எடுத்துக்கொண்டு, ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளப்படியுள்ள அர்த்தங்களை எடுத்து விளக்கினர்கள். அவர்கள் பிறர் ஆக்ஷேபித்த இடங்களுக்கு ஸமாதாநம் சொன்னர்கள். பிறர் ஆக்ஷேபிக்காத விடத்தில் தாங்களே ஆக்ஷேபணையையும் சொல்லி அதற்கு ஸமாதாநமும் சொன்னர்கள். சில முக்யமான இடங்களில் வித்வான்களால் சர்ச்சிக்கப்பட்டு ஸித்தாந்த நிஷ்கர்ஷம் சொல்ல முடியாமல் விவாதாஸ்பதமான விஷயங்கள் நேர்ந்தபோது, ஸ்ரீ அழகிய சிங்கர் ச்ருதப்ரகாசிகா முதலிய பூர்வாசார்ய திவ்ய ஸூக்திகளை ப்ரமாணமாகக் காட்டி ஸித்தாந்த நிஷ்கர்ஷம் செய்தருள, அதனால், வந்திருந்த வித்வான்கள் அளவற்ற ஸந்தோஷம் அடைந்தனர்.

ப்ரதி வர்ஷமும் வந்து ஸதஸ்ஸை அலங்கரிக்கும் இந்த வித்வான்களுடைய வாதங்கள் அழகாக இருந்தன என்கிறார் அந்த ஸ்வாமி. இருந்திருக்கும்; அதில் கொஞ்சமும் ஸந்தேஹமே இல்லை. இவர்களைத் தவிர்த்து ஸ்ரீ அழகிய சிங்கருடைய கருணைக்கு ப்ரதான பாத்ரங்களாக விளங்குகிறவர்களும், ஸ்ரீ அழகிய சிங்கரிடமே ஸ்ரீ பாஷ்யம் காலக்ஷேபம் பண்ணுகிறவர்களுமான சில இளம் வித்வான்களும் ஸதஸ்ஸில் பங்கெடுத்துக்கொண்டார்கள். இந்த இளம் வித்வான்களைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் இங்குச் சொல்வது உபபந்நமாகவே இருக்குமென்று நினைக்கிறேன். ஸ்ரீமத் அழகிய சிங்கர் மதுராந்தகத்தில் ஸம்ஸ்க்ருத கலாசாலை ஸ்தாபித்தருளியது, மிகவும் முக்யமான ஒரு அபிஸந்தியைத் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டுதான். நம்து விசிஷ்டாத்வைத வேதாந்தத்தை ப்ரவசநம் பண்ணக்கூடிய மஹான்கள் வரவரக் குறைந்துகொண்டு வருகிறார்கள். இந்தக் காலத்தில் ஸம்ஸ்க்ருத வித்யையைத் தகுந்த அதிகாரிகளுக்குப் போதித்துவைத்தால், காலக்ரமத்தில் அவர்களை வேதாந்த வித்யையை அப்யஸிக்கச்செய்து, அவர்களைக்கொண்டே ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்விக்கலாம் என்பதுதான் அவருடைய அவா. எனவே, மதுராந்தகம் கலாசாலையில் படித்து ஶிரோமணி பரீக்ஷை பாஸ் பண்ணிவிட்டு, ஸம்ஸ்க்ருத வித்யையில் நிஷ்ணாதர்களாக விருக்கும் மேதாவிகளான சில இளம் வித்வான்களை அழைத்து, அவர்களுக்கு ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் செய்து வைக்க ஸ்ரீ அழகிய சிங்கர் ஸங்கல்பித்தருளினார். ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ளப்படியே சில வித்வான்கள் ஸ்ரீ ஸந்நிதியில் வந்திருந்து ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிவாரத்தில் காலக்ஷேபம் செய்கிறார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரிடமிருந்தே வித்யையை க்ரஹிக்கும் இவர்கள் பாக்யம் ஒப்பற்றதுதான். இளம் வயதில் வேதாந்த பரிசயம் செய்துகொள்ளும் இந்த இளம் வித்வான்களை எல்லாரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஸ்ரீமத் விசிஷ்டாத்வைத வேதாந்தம் நன்கு பரவவேண்டுமென்னும் உயர்ந்த லக்ஷ்யத்தையே தமது குறிக்கோளாகக் கொண்டிருக்கும் ஸ்ரீமத் அழகிய சிங்கரும், இந்த வித்யார்த்திகளுடைய ஸர்வ விதமான யோகக்ஷேமத்தையும் நிர்வஹித்தருளுகிறார். மேலும், இந்த வித்யார்த்திகளுக்குச் சிந்தனை பண்ணிவைக்கும் ஆசார்யர்களாகவும் சில ஸ்வாமிகளை நியமித்து, அவர்களுடைய யோகக்ஷேமங்களையும் கவனித்துக் கொள்ளுகிறார் ஆசார்யன். இவ்வாறெல்லாம் தொண்டு புரியும் ஸ்ரீமத் அழகிய சிங்கரை, அபேக்ஷிதமான ஸர்வ பலன்களையுங் கொடுக்கக் கூடிய கல்ப வ்ருக்ஷத்தை க்ருஷி செய்து வளர்க்கும் பயிராளியாகக் கருதலாம். இவருடைய க்ருஷியின் பலனாக, வருங் காலத்தில் ஸ்ரீமத் விசிஷ்டாத்வைதம் எல்லா இடங்களிலும் பரவி விளங்கப்போகிற தென்பதில் ஸந்தேஹமில்லை. இந்த உத்தமமான கைங்கர்யத்தின் சிறப்புக்கு இனி வரப்போகும் காலம்தான் ஸாக்ஷி சொல்லப்போகிறது. இதை யெல்லாம் கேட்கும்போது நமது மனம் பரவசமாகிறது. இனி நம் தர்சநத்துக்கு எப்போதும் நற்காலந்தான் என்று ஒரு குதூஹலம் அடியோங்களைப் பரவசப்படுத்துகிறது. இவ்வாறு ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிவாரத்தில் காலக்ஷேபம் பண்ணிவரும் இளம் வித்வான்க ளெல்லாம், ஸதஸ்ஸின் வாதங்களில் கலந்துகொண்டார்கள்.

இவர்களுடைய வாதங்களைக் கேட்ட ஸ்ரீ அழகிய சிங்கர், "திருமாலைப் பாடக் கேட்டு, வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்று திருமங்கை மன்னன் அருளிச் செய்தது போல், தமது க்ருஷி ஸார்த்த மாயிற்றென்று மிகவும் ஆநந்தம் அடைந்தருளி யாயிருக்கும்.

இவ்வாறு மிகவும் ஆச்சர்யகரமாக நடந்தேறிய வித்வத் ஸதஸ்ஸில் ஒரு முக்யமான வாக்யார்த்த வாதம் குறிப்பிடத்தகுந்ததாக இருந்தது. நமது அத்ருஷ்ட வசமாக விசிஷ்டாத்வைத தர்சநத்தின் தலஸ்பர்சிகளாக அநேக மஹான்கள் இப்போதும் எழுந்தருளியிருக்கிறார்கள். ஸ்ரீமத் புத்தங்கோட்டகம் ஸ்வாமி முதலிய மஹான்கள் நிஷ்பக்ஷபாதமான மத்யஸ்தராக இருந்து செய்யும் மாத்யஸ்த்யத்தை எல்லாருமே ஒப்புக்கொள்வார்கள். மிகவும் ப்ரஸித்தர்களான ஸ்ரீமத் தேவனார்விளாகம் ஸ்வாமி முதலிய மஹா வித்வான்கள் ஸதஸ்ஸுக்கு எழுந்தருளாதது ஒரு குறைவுதான். ஆயினும் ஸ்ரீ. உப. மதுராந்தகம் வீரராகவாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீ.உப. திருவரங்கம் திருமலை தாதாசார்ய ஸ்வாமியும் வந்திருந்தார்கள். இவ்விருவரையும் ஸ்ரீ அழகிய சிங்கர் நியமித்தருள, இவர்களும் அத்புதமாக வாக்யார்த்தம் சொல்லி எல்லாரையும் மகிழ்வித்தார்கள். இந்த ஆநந்தாநுபவத்தை நேரில் கண்டு அனுபவிக்காத அடியேன் அதை வர்ணிக்கப்புகுவது தகுதி யன்று. எல்லாரும் இதை மனத்தினால் கற்பனை செய்து அநுபவித்துவிட்டு அடுத்த வர்ஷம் இத்தகைய வாத யுத்தத்துக்கு நேரில் வந்து அதை அநுபவிக்கவேண்டுவதுதான் கடமை.

இதுவரையில் மிகவும் ப்ரஸித்தர்களான வித்வான்கள் வந்திருந்து மாலோல வித்வத் ஸதஸ்ஸில் அந்வயித்த ப்ரகாரத்தைப்பற்றிச் சொன்னோம். இவர்கள் தவிர அநேகம் புது இளம் வித்வான்களும் வந்திருந்தார்கள். இவர்களையும், ப்ரஸித்தமான ஞானத்தினாலும் வயதினாலும் வ்ருத்தர்களான மஹான்களையும் ஸமாந மாக்குவது ஸரியாகாது. எனவே, பத்ரிகைகளில் ப்ரசுரஞ்செய்து விளம்பரப்படுத்தியபடி இத்தகைய இளம் வித்வான்களுடைய யோக்யதையை நிர்ணயம் செய்ய ஒரு பரீக்ஷை நடத்தினார்கள். வித்வத் ஸதஸ்ஸில் எட்டாவது திருநாளன்று இந்தப் பரீக்ஷை நடந்தது. அதில் அந்வயிக்க விரும்பிய வித்வான்க ளெல்லாம் அந்வயித்து எழுதினார்கள். ஸ்ரீமத் புத்தங்கோட்டகம் ஸ்வாமியும் இன்னும் சிலரும் பரீக்ஷாதிகாரிகளாக இருந்து பரிக்ஷை நடத்தினார்கள். இந்தப் பரீக்ஷையின் முடிவு, இத்தகைய பரீக்ஷை எவ்வளவு அவச்யம் என்பதை நன்றாக எடுத்துக் காட்டிவிட்டது. சில இளம் வித்வான்கள் விஷயங்களை மிகவும் நன்றாக எடுத்துக் கூறும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். இத்தகையவர்களை ப்ரஸித்த வித்வத் கோஷ்டியினரோடு மிகவும் ஸந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள் பரீக்ஷாதிகாரிகள். பரீக்ஷை யெழுதியவர்களில் சிலர் இன்னுங் கொஞ்சம் பரிச்ரமப்பட்டு விஷயங்களை நன்றாகச் சொல்லக்கூடிய திறமையை ஸம்பாதிக்கவேண்டிய நிலைமையி லிருந்தார்கள், ஸ்ரீமத் அழகிய சிங்காாலும் மற்றும் அங்கு நிறைந்திருந்த வித்வத் ஸிம்ஹங்களாலும் அநுக்ரஹிக்கப்பட்ட பின்பு, இவர்களுக்கு ஞான ஸம்பத் இன்னும்

வ்ருத்தியாகி, இவர்கள் மிகவும் சிறந்து விளங்கப்போகிறார்கள் என்பதில் ஸந்தேஹம் உண்டோ?

இவ்வாறு வித்வத் ஸதஸ் மிகவும் அத்புதமாக நடந்தது. ஸாதாரணமாக ஒன்றுசேர முடியாத பல பெரியோர்கள் அங்கு ஒன்றுசேர்ந்தார்கள். அவர்களுடைய இந்தச் சேர்க்கையை ஸ்ரீ அழகிய சிங்கர் மிகவும் உசிதமாகவும் பயன்படுத்திக்கொண்டருளியாயிற்று. தினமும் ஸதஸ் நடந்த வேளை தவிர மற்றப் பொழுதெல்லாம் இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் விராமம் தானே. ஆகையால் இவர்களில் தினமும் ஒருவரைக்கொண்டு ஸாயங்கால வேளைகளில் உபந்யாஸம் செய்ய ஏற்பாடு செய்தருளினர் ஸ்ரீமத் அழகிய சிங்கர். வித்வான்களுக்குமட்டும் அநுபவிக்கக்கூடிய வேதாந்த விசாரங்கள்போல் இல்லாமல், பாமர ஜனங்களும் அனுபவிக்கும் வண்ணமும் ரஸிக்கும் வண்ணமும் நடந்த இந்த * உபந்யாஸங்கள் மிகவும் சிறப்புடன் சோபித்தனவாம்.

முதல் நாள், ஸ்ரீ ஸந்நிதியில் ஸ்ரீகார்யம் கைங்கர்யம் செய்துவரும் ஸ்ரீ. உப. தையாறு ஜோஸ்யம் வித்வான் ரங்காசார்ய ஸ்வாமி உபந்யஸித்தார். கேட்போர் மனத்தில் விஷயம் பதியும்படியாகவும் சித்த ரஞ்ஜகமாகவும் விஷயங்களை எடுத்துச் சொல்வதில் இவருக்கு இணையில்லை யென்று சொல்லலாம். ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் உபந்யாஸங்கள் இரண்டு நாட்கள் வந்திருந்த வித்வான்கள், மற்றும் சில லௌகிக ப்ரமுகர்கள், இவர்களுடைய ப்ரார்த்தனையின் பேரில் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி தைமீ 6வ 'ஸுகம்' என்பது பற்றி மிகவும் அழகான உபந்யாஸம் செய்தருளினர்.

* ஸதஸ்ஸின்போது ப்ரதிதிநம் இரவு 7-30 மணிக்கு நடந்த உபந்யாஸங்களின் க்ரமம்.

நாட்கள்	உபந்யாஸகர்களின் திருநாமங்கள்.	விஷயங்கள்.
முதல் நாள்	ஸ்ரீ. உப. ஸ்ரீகார்யம் வித்வான் ஜோஸ்யம் ரங்காசார்ய ஸ்வாமி ...	ஆசார்ய பக்தி
,,	ஸ்ரீ. உப. திருக்குடந்தை அக்நிஹோத்ரம் தாதாசார்ய ஸ்வாமி ...	வேத மஹிமை
2-ம் நாள்	,, சித்தூர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி	ராமாயண ஸாரம்
3-ம் நாள்	,, வித்வான் முக்கூர். ராஜகோபாலாசார்ய ஸ்வாமி	ஸ்ரீ ந்ருஸிம்ஹ மஹிமை
4-ம் நாள்	,, ஆஸ்தாந வித்வான் புத்தங்கோட்டகம். ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி	தர்மம்
5-ம் நாள்	,, திருவரங்கம் திருமலை. தாதாசார்ய ஸ்வாமி, M.O.L	வைதிக ப்ரயோகங்களின் ஸாதுத்வம்
6-ம் நாள்	,, ப்ரஹ்மதேசம் வித்வான் ராமாநுஜாசார்ய ஸ்வாமி	நம்மாழ்வாரும் இளைய பெருமாளும்
7-ம் நாள்	,, வடுவூர் வித்வான் ரம்பத்ராசார்ய ஸ்வாமி	பரோபகாரம்
8, 9-ம் நாள்	,, ஆஸ்தாந வித்வான். புத்தங்கோட்டகம் ஸ்வாமி	கீதா ஸாரம்

நடைபெற்றன. பரீக்ஷித்து மஹாராஜன் ஸ்ரீ சுக மஹர்ஷியிடம் "ஸ்வாமி! பசி என்பது உலகத்தில் ஸஹிக்க முடியாத கஷ்டத்தைக் கொடுக்கிற தென்று ப்ரஸித்தமாக இருக்கிறது. அப்படியிருந்தும் அது அடியேனைக் கொஞ்சங்கூட ஹிம்ஸிக்கவே யில்லை. தேவரீருடைய திருமுக மண்டலத்திலிருந்து பெருகுகின்ற ஹரிகதை என்கிற அம்ருதத்தைப் பருகிப் பருகிப் பூரித்துக் கிடக்கும் அடியேனை, ப்ராக்ருதமான இந்தப் பசி என்ன பண்ணும்?" என்று கேட்டார். பரீக்ஷித்து மஹாராஜனுடைய இந்த அநுபவத்தை நாமெல்லாம் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் திருவடிவாரத்தில் அநுபவிக்கிறோம். எனவே, இந்த ஸ்வாமியே தினமும் உபந்யாஸம் செய்தால்கூடக் கேட்டு ஆனந்திப்பதற்கு எல்லாருமே ஆவலோடுதான் இருந்தார்கள். ஆயினும் மற்ற வித்வான்களுக்கும் பேசுவதற்கு அவகாசம் கொடுக்கவேண்டாமா? ஆகையால் அவர் இரண்டு நாட்களோடு நிறுத்திக்கொண்டார். ஒருநாள் திருப்பதி காலேஜில் அத்யக்ஷராக இருக்கும் ஸ்ரீ. உ.வே. திருமலை தாதாசார்ய ஸ்வாமி பேசினார். அவர் ஒரு நல்ல விஷயத்தை எடுத்துக்கொண்டு அதை மிகவும் அழகாக நிரூபித்தருளினார். அவருக்குப் பிறகு மற்ற சில வித்வான்களும் உபந்யஸித்தார்கள். இந்த உபந்யாஸங்களில் இந்த ஸ்வாமிகள் விளக்கிய விஷயங்களைக் கேட்டு அநுபவித்தவர்கள், இவ்விஷயங்களை அடியோங்களெல்லாம் அறியும்வண்ணம் நம் பத்ரிகையில் விளக்கி யெழுதுவார்களென்று எதிர்பார்க்கிறோம். ஸ்ரீ. உ.வே. திருமலை தாதாசார்ய ஸ்வாமி உபந்யஸித்த விஷயம் மாத்ரம் பின்வருமாறு என்று தெரிகிறது.

நாமெல்லாம் காவ்யங்களையும் சாஸ்த்ரங்களையுங் கற்றபின், வேத வாக்யங்களை விசாரம் செய்கிறோம். சில வைதிக சப்த ப்ரயோகங்களை நாம் கற்றறிந்த சாஸ்த்ர ரீதியில் ஸமர்த்தநம் செய்ய முடியாமல், இவைகள் சாந்தஸ ப்ரயோகங்களென்றும், வைதிக ப்ரயோகங்களென்றும், ஆர்ஷ ப்ரயோகங்களென்றும் சொல்லிவிட்டு நிம்மதி யடைகிறோம். இவ்வாறு நாம் கூறும்போது, நாமே மறைமுகமாக "வைதிக சப்தங்கள் சாஸ்த்ரங்களால் ஸமர்த்தநம் பண்ண முடியாதவைகளென்றும், அவைகளில் தவறுகள் இருக்கின்றனவென்றும், அவைகளையே ஒரு வித்வான் ப்ரயோகித்திருந்தால் அது தவறுதான் என்றும் ஒத்துக்கொள்வதுபோல் ஆகுமல்லவா? இது ஸரிதானா? சாந்தஸ ப்ரயோகத்தில் காணப்படும் சில சொற்களுக்கு த்வநி மூலமாகவும் மற்ற விதமாகவும் அபூர்வமான அர்த்த விசேஷங்கள் தோற்றுவதற்காக அவ்வாறு ப்ரயோகிக்கப் பட்டிருக்கின்றனவா? அவைகள் வ்யாகரண சாஸ்த்ர ரீதியில் தவறுதானா?" இந்த விஷயத்தைதான் ஸ்ரீ தாதாசார்ய ஸ்வாமி தமது உபந்யாஸத்துக்கு விஷயமாக எடுத்துக்கொண்டார். அவர் அநேக உதாஹரணங்களைக் காட்டியும், அவற்றின் அர்த்தங்களை விளக்கியும், இப்போது சிலர் சாந்தஸ ப்ரயோகங்கள் என்று கூறிய சில சப்தங்களில் தவறுகளே கிடையாவென்றும் நிரூபித்துக் காட்டினார். "அப்படியானால் சாஸ்த்ரஜ்ஞர்கள் ஒப்புக்கொண்ட ப்ரயோகங்களிலிருந்து மாறுபட்ட ப்ரயோகங்களால் ஏதாவது ப்ரயோஜநம் உண்டா? அப்படியிருந்தால் அது என்ன?" என்று கேட்டுக்கொண்டு, அதற்கு ஸமாதாநமாக சாந்தஸ ப்ரயோகங்கள் ஒவ்வொன்றும்

த்வநி மூலமாகச் சில விசேஷார்த்தங்களைக் கொடுப்பதற்காகத்தான் அப்படி ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன வென்று தெளிவாக உதாஹரண பூர்வமாக விளக்கிக் காட்டினார். இந்த உபந்யாஸத்தைக் கேட்ட பிறகு, இனி ஒருவரும் வைதிக சப்தங்களில் வ்யாகரணப் பிழைகள் இருப்பனவாகக் குறை கூறவே துணியமாட்டார்க ளென்பது நிச்சயம்.

இப்படிப் பத்து நாள் வரையில் மஹோத்ஸவம், வேதாந்த விஷயங்களில் சர்ச்சையாகவும் உபந்யாஸங்களாகவும் அத்புதமாக நடந்தது. இந்தப் பத்து நாட்களும் எம்பெருமான் விசேஷமான திருவாராதநம் கண்டருளினர். வந்திருந்த பாகவதோத்தமர்கள் எல்லாருக்கும் ஷட்ரஸோபேதமாகத் ததீயாரா தநம் நடந்தது.

ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்ஸின் பத்தாவது திருநாள் மஹோத்ஸவமும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய அவதாரத் திருநாள் மஹோத்ஸவமும் ஒன்று சேர்ந்த படியால், அன்றைய தினம் மஹோத்ஸவம் அத்யாத்ருதமான வைபவத்தோடு நடந்தது. அன்று திருநக்ஷத்ரத்தை முன்னிட்டு லௌகிகர்களும் வைதிகர்களு மான அநேகர் வெளியூர்களிலிருந்து வந்திருந்தார்கள். அன்றும் வழக்கம் போல் உத்ஸவ கோலாஹலங்கள் இருந்தன. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அத்யா த்ருதமாகத் திருவாராதனங் கண்டருளினர். ஞான ஸேவதியாக விளங்கும் ஸ்ரீ அழகிய சிங்கர், அன்று அப்ராக்ருதமான திவ்ய தேஜஸ் சுடர் விட்டு ஜ்வலிக்கத் திருவோலக்கத்தில் எழுந்தருளியபோது, கூடியிருந்தவர்கள் எல்லா ரும் ஸேவித்துப் பரவசமானார்கள்.

அன்றைய தினம் நிகழ்ச்சிகளில் பல விசேஷாம்சங்கள் இருந்த போதி லும், அவற்றுள் இரண்டை மட்டிலும் இங்குக் குறிப்பிட விரும்புகிறோம். இவை, திவ்ய தேசத் தெம்பெருமான்களுடைய மரியாதைகளை ஸ்ரீ அழகிய சிங் கர் திருவுள்ளம் பற்றியதும், அன்று ராத்ரி டோலோத்ஸவ ஸமயத்தில் எழுந் தருளியிருந்த வித்வான்களுக்கு ஸம்பாவனை பண்ணி ஸத்கரித்ததும் தான்.

திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை முன்னிட்டு வழக்கம்போல் திவ்யதேசங் களிலிருந்து மரியாதைகள் வந்திருந்தன. ஸ்ரீமத் அஹோபிலம், புள்ளம்பூதங் குடி, சோளஸிம்ஹபுரம் முதலிய திவ்யதேசங்களிலிருந்தும், மற்ற திவ்ய தேசங்களிள்ள ஸ்ரீ அஹோபில மடங்களிலிருந்தும் மரியாதைகள் வந்திருந்தன. வழக்கம்போல் பெரிய பெருமாளுடைய ஸந்நிதியில், குழுமி யிருந்த வித்வான்க ளெல்லாம் கண்டு பரமாநந்த மடைய, சிஷ்ய வர்க்கங்க ளெல்லாம் ஸேவித்துப் பரவச மடைய, ஸ்ரீ அழகிய சிங்கர் இந்த மரியாதை களைத் திருவுள்ளம் பற்றியருளினர். முதல் முதல் அஹோபிலம் பெரிய பெரு மாளுடைய மரியாதை ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ அழகிங்கருக்கு யத்ஸரிகை கூறி, திருப்பரியட்டம் சாத்தி, பெரிய கட்டு மாலைகளையும் சாத்தி, துளஸி அபய ஹஸ்தம் முதலிய ப்ரஸாதங்களையும் ஸமர்ப்பித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்து நின்றுகொண்டு இந்த மரியாதையை ஏற்றுக்கொண்டார். இந்த மர்யாதையை ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஸமர்ப்பித்து, அதை அவர் திரு

வுள்ளம்பற்றும் காட்சியை மானஸிகமாக அடியேன் அநுபவிக்கும்போது, பின்வரும் வண்ணம் அடியேனுக்கு ஓர் அநுபவம் உண்டாயிற்று.

ஸ்ரீ அஹோபிலம் எம்பெருமான், தாம் அநுக்ரஹித்த மரியாதைகளைக் கைங்கர்யபரர்கள் ஸ்ரீ அழகிய சிங்கரிடம் ஸமர்ப்பித்து, அவற்றை அவர் திருவுள்ளம்பற்றி யருளும்போது மிகவும் திருவுள்ளம் உகந்திருப்பர். அவர் ஸ்ரீ அழகிய சிங்கரிடம், "ஜீயரே! நாம் உம்முடைய திருவாராதநத்தால் மிகவும் ஸந்தோஷம் அடைந்தோம். முந்தின ஸ்ரீ அழகிய சிங்கர்களுடைய வழியை அடியொற்றி நடந்து, ஸ்ரீ விசிஷ்டாத்வைத வேதாந்த தர்சநத்தின் சுடர் உலகமெல்லாம் ப்ரகாசிக்கும்படி அதிமாநுஷங்களான பல கைங்கர்யங்களையும் செய்து, ஸ்ரீமத் அஹோபில மடத்தின் புகழை வானளாவ உயர்த்தி வைத்த உமது தொண்டு எம்மை ஸந்தோஷத்தால் பூரிக்கச் செய்துவிட்டது. உம்மால் இதைப்போல் இன்னும் அநேகம் கைங்கர்யங்கள் நடக்கவேண்டும். ஆகையால் நீர் திட காத்ரத்தோடு நீடூழி காலம் இருந்து இந்தத் தொண்டுகளைத் தொடர்ந்து செய்துவாரும்" என்றும் நியமித்தருளியிருப்பார். ஸ்ரீ அழகிய சிங்கரும், 'பதியினால் ஸம்மானிக்கப்பட்டாள் ஸீதை' என்று ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி கொண்டாடுவதுபோல், தமது தொண்டுகளை ஸேஷி புகந்து திருவுள்ளம்பற்றி யருளினுரென்று அறிந்து பேரின்பத்தின் எல்லையை அநுபவித்தருளியிருப்பர். இந்த அடியேன் அநுபவம் எல்லாருடைய உள்ளத்திலும் உண்டாகியிருக்கும் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

இவ்வாறு ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்திலிருந்து வந்த மர்யாதைகளைத் திருவுள்ளம்பற்றிய பின்பு, மற்ற திவ்ய தேசங்களிலிருந்து வந்த மரியாதைகளையும் ஏற்றுக்கொண்டார். ஒவ்வொரு மரியாதையை ஸமர்ப்பிக்கும்போதும் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு யத்ஸரிகை கூறி, திருப்பரியட்டம் சாத்தி, திருமாலைகளையும் சாத்தி, திருத்துழாய் அபய ஹஸ்தங்களையும் ஸமர்ப்பித்தார்கள். இவ்வாறு ஸுமார் அரை மணி அல்லது முக்கால் மணி அவகாசம் இந்த வைபவம் நடந்தது. இதனுல் எல்லாரும் மிகுந்த ஆனந்தமடைந்தார்கள்.

அன்றிரவு நடந்த டோலோத்ஸவத்தில், இவ்வுத்ஸவத்திற்கு வந்திருந்த வித்வான்களுக்கெல்லாம் உசிதமாக ஸம்பாவனை செய்யப்பட்டது. வந்திருந்த ஒவ்வொரு வித்வானுக்கும் 20 ரூபாய் ஸம்பாவனையும், வந்துபோவதற்கான செலவும் கொடுக்கப்பட்டன. இந்த ஸம்பாவனை விஷயத்தில் பரிக்ஷிதர்களான வித்வான்களுக்கும் மற்றவர்களுக்கும் தாரதம்யம் ஏதும் செய்யப்படவில்லை. ஸ்ரீ ஸந்நிதியிலே யிருந்து காலக்ஷேபம் பண்ணி, ஸதஸ்ஸில் அந்வயித்த இளம் வித்வான்களுக்கும் இவ்வாறே ஸம்பாவனை செய்யப்பட்டது. பரீக்ஷையில் அந்வயித்து அதில் தேறியவர்களுக்கும் ஸம்பாவனை பண்ணப்பட்டது.

பரீக்ஷையில் வித்வான்கள் எழுதிய விஷயங்களைப் பரிசீலநம் பண்ணிய ஸ்ரீ. உ.ப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி, தாம் காணவந்த சிறு குறைகளை ஸதஸ்ஸில் எடுத்துக் கூறியது மிகவும் உசிதமேயாகும். ஸ்ரீ அழகிய சிங்கருடைய

திருவுள்ளம், எல்லாரும் ஸ்ரீ பாஷ்யத்தை நன்ருக ஸேவித்து அதில் நிஷ்பத்தியடையவேண்டும் என்பது. அதை உத்தேசித்துத்தான் இந்த ஸதஸ் நடத்துவதும் ஸம்பாவனை பண்ணுவதும். எனவே அதில் அந்வயிக்கவேண்டிய யோக்யதையைப் பெற்றவர்களுக்குத்தான் ஸம்பாவனை பண்ணுவது க்ரமம். நன்ருக விஷய மறிந்தவர்களையும் வித்யா விசாரத்தின் ஆரம்பத்தில் இருப்பவர்களையும் ஒன்ருக வைப்பது ஸரியில்லை. ஆகையால் பரிக்ஷையில் தேறியவர்களுக்கு மாத்ரம் முழு ஸம்பாவனையையும் செய்து, மற்றவர்களுக்குக் கொஞ்சம் குறைவாகக் கொடுப்பதுதான் உசிதம். அப்படித்தான் கொடுக்கப்படும் என்று கூறினர் ஸ்வாமி. அப்படியே பரீக்ஷையில் நன்ருக எழுதாதவர்களுக்குக் குறைந்த ஸம்பாவனையையும் பண்ணினர்கள்.

ஸம்பாவனை யெல்லாம் நடந்து முடிந்தபிறகு, ஸ்ரீ அழகிய சிங்கர் நியமனத்தால் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி மறுபடியும் கூறினர். ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருவுள்ளம் மிகவும் விசாலமாக இருப்பதனுல், அவர், பரீக்ஷையில் தங்கள் யோக்யதைகளை நன்ருக ப்ரகாசப்படுத்தாதவர்கள் விஷயத்தில்கூட மிகவும் ப்ரீதி பண்ணி, அவர்களுக்குச் செய்த ஸம்பாவனையில் ரூபாய் இருபதுக்குக் குறைவாக இருந்த அம்சத்தைப் பூர்த்தி பண்ணி, அவர்களையும் மற்றவர்களுக்கு ஸமானமாக ஆக்கும்படியாக நியமித்ததாகவும், அப்படியே அந்த வித்வான்கள் தங்களுக்குச் சேரவேண்டிய அம்சத்தைப் பெற்றுக்கொள்ளலா மென்றும் கூறினர். அந்த வித்வான்களும் அவ்வாறே பெற்றுக்கொண்டு மகிழ்ந்தார்கள். இந்த வித்வான்கள் இனி அடுத்த வர்ஷத்தில், ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி கூறியபடி ஸ்ரீ பாஷ்யத்தை நன்ருகப் பரிசயம் பண்ணிக்கொண்டு, தங்கள் பூர்ண யோக்யதையை ஸதஸ்ஸில் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கிருேம்.

இவ்வாறு வித்வான்களுக் கெல்லாம் ஸம்பாவனை ஆனபிறகு, திவ்ய தேசங்களிலிருந்து மரியாதைகள் கொண்டுவந்தவர்களுக்கும் உசிதமாக ஸம்பாவனை பண்ணப்பட்டது. இவ்வாறு இவ்வித்வத் ஸதஸ்ஸுக்காக ஸம்பாவனைக்காக மாத்ரம் ஐயாயிரம் ரூபாய் வரையில் ஸந்நிதிக்குச் செலவாகியிருக்குமென்று ஊஹிக்கலாம். ஸ்ரீ அழகிய சிங்கர் விஷயமாகச் சிலர் பாராட்டிப் பேசி, அவர் விஷயமாகத் தாங்கள் எழுதிய மங்களங்கள் முதலியவற்றை வாசித்து மகிழ்ந்தார்கள் என்றும் அறிகிருேம்.

கடைசியாக நண்பர், இந்தப் பத்து நாள் மஹோத்ஸவமும், அப்ராக்ருதமான திவ்யலோகத்தில் இருந்ததுபோன்ற ஒரு ஆநந்தாநுபவத்தைத் தந்ததென்று கூறி முடிக்கிருர். நண்பருடைய அநுபவங்களை யெல்லாம் அடியேனும் மாநஸிகமாக அநுபவித்தேன்.

இத்தகைய மஹாபுருஷராக விளங்கும் ஸ்ரீமத் அழகிய சிங்கர் இன்னும் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து அடியோங்களைப் பரிபாலித்தருளவேண்டு மென்றும், இன்னும் பலபல கைங்கர்யங்களையும் நடத்தி நம் ஸ்ரீ மடத்தின் பெருமையை மலையின்மேலிட்ட விளக்காக உலகமெல்லாம் ப்ரகாசிக்கும்படி செய்தருளவேண்டு மென்றும் ப்ரார்த்திக்கிறேன்.

[illegible]

மது வித்யா

[ஒன்பதாவது மாலோல வித்வத் ஸதஸ்ஸில் ஸ்ரீ. உப. வில்லூர் நடாதூர் வித்வான் சிரோமணி ஆசுகவி ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி உபந்யஸித்த ச்லோகங்கள்]

1 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

2 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

3 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

4 [illegible]
[illegible]

5 [illegible]
[illegible]
* [illegible]

6 [illegible]
[illegible]

7 [illegible]
[illegible]
([illegible])

8 [illegible]
[illegible]

---

* ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா, மதுராந்தகம் ஸ்ரீ ஸம்ஸ்க்ருத கலாசாலை இந்த மூன்றையும் என்றவாறு.

9 [illegible] ।
[illegible] ॥

10 [illegible] ।
[illegible] ॥

11 [illegible] ।
[illegible] ॥

12 [illegible] ।
[illegible] ॥

13 [illegible] ।
[illegible] ॥

[illegible]

14 [illegible] ।
[illegible] ॥

15 [illegible] ।
[illegible] ॥

16 [illegible] ।
[illegible] ॥

17 [illegible] ।
[illegible] ॥

18 [illegible] ।
[illegible] ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

சர்ச்சா லஹரீ

[வேதாந்த சாஸ்த்ர விஷயமான ரஸமான சர்ச்சைகள் அவச்யமானபோது சுருக்கமாய் இந்தத் தலைப்பின்கீழ் வரும். இதில் வெளியிடுவதற்கு அனுப்பப்படும் விஷயங்கள் சுருக்கமாயும் தெளிவாயும் இருக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறது.]

ஸம்பாதகர்.

ஸப்தோத்தித பராமர்சம் 1

ஸ்ரீ பாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் '[illegible]' என்று,

189268

ஸ்வாப காலத்தில் ஆத்மாவினுள்ள ஸுகித்வத்துக்கும் ஜ்ஞாத்ருத்வத்துக்கும் ஜ்ஞாந முண்டென்று சொல்லப்பட்டிருககிறது. அந்த பாஷ்யத்தின் ச்ருதப்ர காஶிகையில் 'ஸுகமஹமஸ்வாப்ஸம்' என்கிற பராமர்ஶத்தில் 'ஸுகம்' என்பதால் 'அப்பொழுது அநுகூலமாகத்தோன்றுகை' பராமர்ஶிக்கப்படுகிறது. 'அஹம்' என்பதால் 'ஸ்வப்ரகாஶதயா ஸ்வஸ்மை ஸ்வயம் ப்ரகாஶமாந த்வ'மும் பராமர் ஶிக்கப்படுகிறது. எப்படி, 'மந்தமாகப் போனேன்,' 'மதுரமாகப் பாடி னேன்' என்கிற பராமர்ஶத்தாலே முன்புள்ள மமநத்தோடும் காநத்தோடும், தாத்காலிகமான மாந்த்யமும் மாதுர்யமும் பராமர்ஶிக்கப்படுகின்றனவோ, அப்படியே யென்று அர்த்தம். தன் பொருட்டுத் தான் அநுகூலமென்று ஆநுகூல்ய ப்ரதியோகித்வாபிப்ராயத்தாலே ஸுகித்வம் என்று சொல்லப்பட் டது. தன் பொருட்டு ப்ரகாஶிக்கிற தென்று பாஸ ப்ரதி ஸம்பந்தித்வ ரூபமான ப்ரத்யக்த்வாபிப்ராயத்தாலே ஜ்ஞாத்ருத்வம் என்ற சொல்லப்பட்டது. அன்றிக்கே, தர்ம பூத ஜ்ஞாநத்தின் ப்ரகாஶத்தாலே யன்று" என்று சொல்லப் பட்டது. சில பங்க்திகளுக்குப் பிறகு 'ஸுகமஹமஸ்வாப்ஸம்' என்று ஸுகத் திற்கு ஸ்வாபரூபமான க்ரியையில் விஶேஷணத்வம் தோன்று நிற்க, எப்படி ஆத்ம விஶேஷணத்வம் சொல்லப்படுகிற தென்று ஆக்ஷேபித்துக்கொண்டு, க்ரியைக்கு ஸுகத்வாஶ்ரயத்வம் பாதித மாகையாலே, அதாவது: 'ஸுகத்வாஶ்ரயத்வாயோகேந, ஸுகஸப்தஸ்ய (ஸாமாநாதிகரண்யஸம்பந்தேந க்ரியாவிஶேஷணத்வம் யுக்தம்' என்று பரிஹரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ ந்யாய ஸித்தாஞ்ஜந வ்யாக்யாந ரத்நபேடிகையில் 'அதாயம் உபலம்பம் உபதர்ஶம்' என்கிற ச்லோக வ்யாக்யாநாவஸரத்தில் 'அதீதகாலா வச்சிந்ந: ஸுகவிஶேஷிதஸ்வாப: ததாஶ்ரயோஹம்' என்று ப்ரதிஸந்தாந ப்ரகாரத்தைச் சொல்லி, அதில் ஸுக ரூபத்வம்' க்ரியா ரூப ஸ்வாபத்திற்கு எப்படி ஸம்பவிக்கு மென்கிற மத்யஸ்தனுடைய ஶங்கையை ஹ்ருதயத்தில் வைத்து, அங்கு ஆத்மாவிலிருக்கும் ஸுகத்வமே தனக்கு ஆச்ரயமான ஆத்மா வில் இருக்குகையாகிற பரம்பரா ஸம்பந்தத்தாலே (ஸாமாநாதிகரண்ய ஸம்பந்தத்தாலே) ஸ்வாபத்தில் தோன்றுகிறது. ததா ச 'ஸுக' ஶப்தத்தாலே ஸுகமான ஆதமாவி லிருக்குகையே விவக்ஷிதமென்று ஆத்மாவிலேயே ஸுகவ த்வஹாநம் பலிதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி, ஆத்மாவிலிருக்கும் ஸுகத்வம் பரம்பரா ஸம்பந்தத்தாலே ஸ்வாப ரூப க்ரியையில் இருப்பதால், ஸ்வாபம் ஸுகத்வவத்தாக (அதாவது: ஸுகமாக) ஆகிவிட்டபடியால், ஸுகாபிந்நத்வம் ஸ்வாபத்துக்கு வந்துவிட்ட தென்றும், அஹமர்த்தமான ஆத்மாவுக்கே ஸுகத்வம் இருக்கிற தென்றும், 'ஸுகமஹமஸ்வாப்ஸம்' என்கிற பராமர்ஶத்தாலே ஸ்தாபிதமானல், துல்ய ந்யாயத்தாலே 'து:கமஹமஸ்வாப்ஸம்' என்கிற ஒருவனுடைய ப்ரத்யவமர் ஶத்தாலே ஆத்மவ்ருத்தி துக்கத்வமும் ஸாமாநாதிகரண்ய ஸம்பந்தத்தாலே ஸ்வாபத்தில் தோன்றுகிறது என்று சொல்லவேண்டு மாகையால், ஆத் மாவுக்குத் துக்கத்வமும் ஸுகத்வம் போல் கொள்ளவேண்டி வருமே!

மேலும், 'து:கவத் ஸுகாஸ்வாத:' என்கிற பராமர்ஶமே இல்லையென்று சொல்ல முடியாது. லோகத்தில் சிலர்க்கு அப்படியே பராமர்ஶமும் இருக்கக் கூடுமாகையாலே. ஆகையால் தான், 'ஸுகாநுஶயீ ராக:' என்கிற பாதஞ்ஜல யோக ஸூத்ரவ்யாக்யாந வ்யாஸ பாஷ்யத்தில், 'ஸுகவத் ஸுகாஸ்வாத:, ஸுகம் ச ந: விஶாரதீ கரோதி,' 'து:கவத் ஸுகாஸ்வாத:, ஸ்தாநம் ச ந: ப்ரச்யாவயதி,' 'மோஹம் அநுகூலஸுகாஸ்வாத:, மோஹமணிநா ப்ராணி, ஜ்ஞாநம் ச திரோதத்தே, ஸுகஸ்வம் ஸுகமிதமிவ திஷ்டதி' என்று ஸத்வ ரஜஸ் தமோகுண பேதத்தாலே 'ஸுகவத் ஸுகாஸ்வாத:' இத்யாதிகளான ஸூக்தோக்திதனுடைய பராமர்ஶங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

சிற்றறிவுள்ள அடியேனுடைய இந்த ஆக்ஷேபத்திற்கு அபிஜ்ஞர்களான மஹான்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மூலமாக ஸமாதாநம் அருளிச் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

ஓர் ந்யாய சிரோமணி வேதாந்த வித்யார்த்தி
[திருவெவ்வுளூர்.]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விக்ருதி ௵, சித்திரை மீ. [ஏப்ரல்—மே, 1950]

[உத்தராயணம், வஸந்த ருது, மேஷ மீ.]

13—4—50	1உ	வியாழக்கிழமை	... ஶூந்ய திதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம், மேஷ ரவி 26-52 (இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்) தமிழ் வருஷப் பிறப்புப் பண்டிகை
14—4—50	2உ	வெள்ளிக்கிழமை	... த்ரயோதசி திதி
15—4—50	3உ	சனிக்கிழமை	... சதுர்த்தசி திதி
16—4—50	4உ	ஞாயிற்றுக்கிழமை	... அமாவாஸ்யை திதி; ஸர்வ அமாவாஸ்யை
17—4—50	5உ	திங்கட்கிழமை	... அதிதி
18—4—50	6உ	செவ்வாய்க்கிழமை	... ப்ரதமை திதி
20—4—50	8உ	வியாழக்கிழமை	... அக்ஷயத்ருதீயை; உய்யக்கொண்டார் திரு நக்ஷத்ரம்
23—4—50	11உ	ஞாயிற்றுக்கிழமை	... ஸ்ரீ உடையவர் திருநக்ஷத்ரம்
28—4—50	16உ	வெள்ளிக்கிழமை	... ஸர்வ ஏகாதசி
30—4—50	18உ	ஞாயிற்றுக்கிழமை	... ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி
1—5—50	19உ	திங்கட்கிழமை	... சதுர்த்தசி – பௌர்ணமி திதி த்வயம்; ஸ்ரீ மதுரகவிகள் திருநக்ஷத்ரம்
2—5—50	20உ	செவ்வாய்க்கிழமை	... ப்ரதமை திதி; சித்ரா பௌர்ணமி
12—5—50	30உ	வெள்ளிக்கிழமை	... ஸர்வ ஏகாதசி
13—5—50	31உ	சனிக்கிழமை	... மேஷ க்ருஷ்ண த்வாதசி திதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஆஸ்திக ஸபை, கோடம்பாக்கம், சென்னை

ஷை ஸபையின் ஆதரவில் சென்ற மார்கழி மீ°. முழுவதும் காலை 6-30 மணி முதல் 8-மணி வரை திருப்பாவை உபந்யாஸம், திருக்குடந்தை ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமியால் மாம்பலம் ஸ்ரீ ராமகிருஷ்ண வடக்குக் கிளை ஹை ஸ்கூலில் நடைபெற்றது. ஆஸ்திகர்கள் பலர் வந்திருந்து கேட்டுக் களித்தனர். தை மீ°. 1௳ மாலை 3-மணிக்கு, சாத்துமறைப் பாசுர உபந்யாஸமும் ஆண்டாள் கல்யாணமும் நடந்தேறின. பல பெண்மணிகள் திருப்பாவைப் பாசுரங்களையும், நாச்சியார் திருமொழியில் சில பாசுரங்களையும், இனிய கானத்தில் பாடிச் சபையோரைக் களிப்பித்தனர். பின்னர் உபந்யாஸக ஸ்வாமிக்கு ஸம்பாவனையும், மார்கழி மீ°. 30 நாட்களிலும் நாட் பாசுரங்களைக் கானம் செய்த இரு சிறுமிகட்குப் பரிசும் வழங்கப்பட்டன.

காரியதரிசிகள்.

*　　　*　　　*　　　*

ஸ்ரீ அழகிய சிங்கர்களின் திருநக்ஷத்ர மஹோத்ஸவ வைபவங்கள்

நிகழும் விரோதி ஞு. தை மீ°. 5௳ (18—1—50) புதன்கிழமை உத்தராஷாடா யுக்த நன்னாளில் ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாவளியை ஸார்த்த பூர்ணமாக அநுஷ்டான முகத்தால் காட்டியருளிய மஹோதார மஹாதேசிகன் திருநக்ஷத்ர மஹோத்ஸவம், தில்லஸ்தானம் ஸ்ரீ அஹோபில மடத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவாராதனாநந்தரம் ஸ்ரீ அழகிய சிங்கர்களுக்கு அருளிப்பாடுக ளிட்டு ஸம்பாவனைகளும் ஆயின. பின்னர், தீர்த்த விநியோகங்களும் விசேஷமான கோஷ்டியும் நடந்தேறின.

ஷை ஞு. மார்கழி மீ°. 29௳ (13—1—50) விசாக நக்ஷத்ரத்தில் ஷை மடத்தில் 40-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரமும், ஷை மீ°. 11௳ (26—12—49) ஸ்ரீ அஹோபில மடம் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரமும் விமர்சையாக ஸேவை சாத்துமறைகளுடனும் கோஷ்டிகளுடனும் பூர்த்தியடைந்தன.

T. S. சேஷாத்ரி தாஸன்.

*　　　*　　　*　　　*

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தர்களாக எழுந்தருளியிருந்த 34-ம் பட்டம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன், 38-ம் பட்டம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், 40-ம் பட்டம் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், 41ம் பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா

தேசிகன்—ஆகிய இம்மஹா தேசிகர்களுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவங்கள் அந்தந்த நன்னாளிலும், ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 18—1—50-ல் உத்திராஷாட நக்ஷத்ரம் கூடின நன்னாளிலும், இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில், ஷை ஸபையாராலும் அத்யாபக வேதபாராயண ஸமிதியாராலும் அதிவிமர்சையாய் நடத்தப்பட்டன.

ஆத்ரேயம் கிடாம்பி நரஸிம்ஹாசார்யர்
[கார்யதர்சி]

* * * *

திருக்குடந்தையில் வேதபாராயணமும் திருவத்யயநோத்ஸவமும்

தத்காலம் லோகத்தில் ஏற்பட்டுள்ள க்ஷோப துர்பிக்ஷ த்வேஷாதிகளான ஸங்கடங்களை நிவர்த்திக்கவும், வேத வைதிக ஸத்ஸம்ப்ரதாய தர்மங்கள் அபிவ்ருத்தியாகி நமக்குள் ஐகமத்யம் வலுக்கவும், ஆங்காங்கு வைதிக தர்ம ப்ரசாரம் நடத்தவேண்டுமென்கிற நமது மதாசார்யர்களின் திருவுள்ளத்தை அநுஸரித்து, திருக்குடந்தை வேதபாராயண ஸபையாரால் சென்ற வருஷம்போல் இவவருஷமும் சென்ற கார்த்திகை மீ 20 தேதி முதல் தை மீ 5 தேதிவரை யஜுர்வேத பாராயணம் வெகு விசேஷ வைபவத்துடன் அய்யங்கார் வீதி தார்மிக ரத்நம் ஸ்ரீ. உப. ஸி. எஸ். அய்யங்கார் ஸ்வாமியினுடைய ஸ்ரீ ராம விலாஸ மந்திரத் திருமாளிகையில் நடத்தப்பட்டது. வேதாத்யயந ஸம்பந்நர்களான ஸ்வாமிகள் அநேகர் மிகுந்த உத்ஸாஹத்துடன் பாராயணத்தில் கலந்து கயபிரமாகப் பாராயணம் செய்தார்கள். ப்ரதி தினமும் ஆஸ்திகர்களான பலர் உபயங்கள் நடத்தினார்கள். கடைசியில் ஐந்து தினங்களில் திருவத்யயநோத்ஸவமும் ததீயாராதநமும் விசேஷமாய் நடந்தன.

தை மீ 5உ மாலை 3-மணிக்கு வித்வத் ஸபை கூடியது. இவ்வூர் ப்ரபல ஆஸ்திக ச்ரேஷ்டரான இளநகர் மாடபூஷி ஸ்ரீ. உப. N. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி அக்ராஸநம் வஹித்தார். ஸ்ரீ. உப. K. S. பாட்ராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. அட்வகேட் C. V. ஜகந்நாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீமான் S. மஹாலிங்கய்யர் முதலியோர் வேத ப்ரசாரமும், நமது அருளிச் செயல்களின் ப்ரசாரமும் இக்காலத்தில் இம்மாதிரி பல இடங்களில் நடக்கவேண்டுமென்று கூறினர். சுமார் 50 ஸ்வாமிகளுக்கு விசேஷ ஸம்பாவனைகள் செய்யப்பட்டன. ஸ்ரீ அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்யர், வைதிகர்களுள் ஒற்றுமையும் உத்ஸாஹமும் இருக்கவேண்டுமென்று உபந்யாஸம் செய்தார். ஸ்ரீ குலபதி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஸபையோர்களுக்கு க்ருதஜ்ஞதையைத் தெரிவித்தார். தலைவர் N. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸவாமி, வேதாத்யயந ஸம்பந்நர்களும், சிஷ்ட ச்ரேஷ்டர்களும் நிறைந்த இந்தத் திருக்குடந்தையில் இத்தகைய கைங்கர்யங்களை விடாமல் நடத்தவேண்டுமென்று கூறினர், வேதபாராயண ஸபையின் சார்பாகக் கார்யதர்சி N. சடகோபாசார்யரால் யாவருக்கும் நன்றி கூறப்பட்டு, ஸபை வெகு உத்ஸாஹத்தினிடையே பூர்த்தி அடைந்தது.

ப்ருஹஸ்பதி நகபாடி - என். சடகோபாசாரியர்,
[கார்யதர்சி, ஸ்ரீ. வே. பா. ஸபை, திருக்குடந்தை]

* * * * *

பண்ணுருட்டி ஸ்ரீ மஹாராதநம்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ

திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிக னுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவமும், 27-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவமும், 13—1—50 முதல் 16—1—50 வரையில் பண்ணுருட்டி அக்ரஹார வீதியில் ஸ்ரீ. பார்த்த ஸாரதி அய்யங்கார் க்ருஹத்தில் நான்கு தினங்கள் அதிவிமர்சையாய் வழக்கம்போல் கொண்டாடப்பட்டன. முதல் தினம் மஹோத்ஸவம் வேதபாராயண அத்யாபக க்ரந்த சதுஷ்டயங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு, கடைசி தினம் வீதி உத்ஸவம் சாத்துமறை முத லியவைகளுடன் கைங்கர்யம் இனிது முடிவடைந்தது. பல இடங்களிலிருந்து அநேக வித்வான்களும் வைதிக லௌகிக ஆஸ்திகர்களும் எழுந்தருளியிருந்தனர். நான்கு தினங் களும் பற்பல அரிய உபந்யாஸங்களும் விசேஷ ததியாராதனமும் நடந்தன. நான்காவது தினம் இரவு ஸ்ரீ அழகியசிங்கரின் ப்ரஸாத ரூபமாக, வித்வான்களுக்கும் கைங்கர்யத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கும் ஸம்பாவனைகள் வழங்கப்பட்டன.

பரவஸ்து. R. சக்ரபாணி அய்யங்கார்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு 1950 ஞ பிப்ரவரி மாதம்

சந்தா நெ.		பெயரும் விலாஸமும்.	வர்ஷம்	தொகை ரூ.
14	ஸ்ரீ.	N. S. சாரி, பம்பாய்	50	3
50	,,	S. ராமஸ்வாமி, பம்பாய்	49	3
67	,,	T. S. பிச்சுவையங்கார், திருக்குறுங்குடி	50	3
79	,,	D. P. செல்லம் ஐயங்கார், சிவஸ்வாமிபுரம், சேலம்	50	3
90	,,	C. V. ராஜகோபாலாசாரியர், ஸ்ரீரங்கம்	49	3
109	,,	K. S. ஸௌந்தரராஜய்யங்கார், நாகப்பட்டினம்	49	3
120	ஸ்ரீமதி.	S. செல்லம்மாள், தேனாம்பேட்டை, சென்னை	50	3
182	ஸ்ரீ.	V. S. ராகவாசாரியர், தி. நகர், சென்னை	49	3
192	,,	S. நரஸிம்ஹன், கல்கத்தா	47, 48, 49 & 50	12
214	,,	ஸ்ரீனிவாஸ கோபாலய்யங்கார், வடசருக்கை	50	3
221	,,	R. வெங்கடேசய்யங்கார், சிதம்பரம்	50	3
249	,,	L. C. ஸுந்தரவரதாசாரியர், அட்வொகேட், சித்தூர்	50	3
284	,,	K. N. தேசிகாசாரியர், திருவள்ளூர்	49	3
294	,,	I. ஸ்ரீனிவாஸாசாரியர், சைதாப்பேட்டை, சென்னை	50	3
333	,,	L. ராஜகோபாலாசாரியர், லாலாப்பேட்டை	50	3
460	,,	P. ராமைங்கார், P. T. சென்னை	47, 48 & 49	9
475	,,	சேட்லூர். ஸ்ரீனிவாஸராகவாசாரியர், தூசி	50	3
502	,,	P. நரஸிம்ம ஐயங்கார், கீழ்க் காசாங்குளம்	50	3
648	ஸ்ரீமதி.	வேதவல்லி அம்மாள், கொடவாசல்	50	3
703	ஸ்ரீ.	V. B. நாராயணன், புது டெல்லி	50	3
808	,,	D. ரங்காசாரியர், வக்கீல், செங்கற்பட்டு	50	3
897	,,	S. துரைஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்	50	3
936	,,	K. முத்துகிருஷ்ணய்யங்கார், சாத்தூர்	50, 51	3
958	,,	K. M. நரஸிம்மாசாரியர், புரசவாக்கம், சென்னை	50	3
959	,,	S. வீரராகவய்யங்கார், மேலவிடையல்.	50	3
			மொத்தம் ரூ.	90

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஜ்ஞாநமும் அநுஷ்டாநமும்

ப்ராத : காலத்தில் (விடியற்காலையில்) ஸ்நாநம் செய்யவேண்டுமென்று விதிக்கிறது தர்ம சாஸ்த்ரம் ; 'ப்ராத ஸ்நாநம் செய்வது உடம்பிற்கு மிகவும் நல்லது' என்கிறார் வைத்தியர் ; டாக்டர்களும் காலையில் நீராடுவது பலவித அநுகூலங்களைக் கொடுக்கிறது என்று அபிப்ராயப்படுகிறார்கள் ; ப்ராதஸ்நாநம் தேஹத்திற்கு ஆரோக்யகரமாக இருப்பதைச் சில ஸமயங்களில் நேரில் கண்டு அநுபவித்து மிருக்கிறோம் ; ச்ருதி ஸ்ம்ருதிகள் ப்ராதஸ்நாநத்தை விதித்திருப்பது மிகவும் பொருத்தமுள்ளது தான் என்று அவைகளையும், அவைகளைப் பின்பற்றியவர்களையும் ச்லாகிக்கிறோம். இருப்பினும் நாம் எல்லாரும் ப்ராத ஸ்நாநம் செய்ய முற்படுகிறதில்லை. இது எதனால் ?

ப்ராணாயாமத்தின் பெருமையைப் பற்றிப் பேசுபவர்கள் பலர். அதனால் மனத்திற்கு ஏற்படும் தெளிவும், சக்தியும், தேஹத்திற்கு உண்டாகும் நன்மைகளும் வெகுவாகப் புகழப்படுகின்றன. இவை மேனாட்டாரும் இப்போது ஒப்புக்கொண்டிருக்கும் உண்மை. ஆசமநத்தின் ஆவச்யகதயைப் பற்றியும் பல பெரியவர்கள் பேசக் கேட்டிருக்கிறோம். இவையனைத்தும் தெரிந்து கொண்டவர்கள் எல்லாரும், ஆசமநம், ப்ராணாயாமம் இவைகளடங்கிய ஸந்த்யாவந்தநம் முதலியவைகளை சரிவரச் செய்துவரக் காண்கின்றிலோம். 'ஸந்த்யாவந்தநம் முதலியவைகளை அவற்றிற்குச் சொல்லப்பட்ட காலங்களில் தவறாமல் செய்வதுதான் உத்தமம். அந்தக் காலத்திற்கு முன்போ அல்லது அந்த காலம் கடந்த பிறகோ செய்வது ப்ரசஸ்தமில்லை' யென்று தெரிந்துகொண்டிருந்தும், பலர் அவைகளை அந்தந்தக் காலத்தில் செய்ய முயற்சிக்காமலிருந்துவருவதையும் பார்த்து வருகிறோம். இவைகளின் காரணம் தான் என்ன ?

ஸத்யம், அஹிம்ஸை, அக்ரோதம் (கோபமின்மை) முதலிய ஆத்ம குணங்களின் மேன்மை பலருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இவைகளின் ஆவச்யகதையைப் பற்றி மிகவும் அழகாக எடுத்துச் சொல்ல பழகிக் கொண்டிருக்கிறோம். ஆனால் சொல்லுபவர்களில் எவ்வளவு பேர் அவைகளை மனப்பூர்வமாகப் பின்பற்றுகிறோம் ?

1

'ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம்; அவனுக்கு நாமனைவரும் தாஸபூதர்கள்; அவனிடத்தில் பக்தி, ப்ரபத்தி செய்வதுதான் நமக்கு அத்யந்த ஹிதம்; அவன் மிகவும் ஸுலபன்; அவனை ஆராதிப்பதும் ரொம்பவும் எளிது; நாம் செய்யும் ஸகல கார்யங்களையும்,

'𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥'

என்று அவன் கீதையில் சொல்லியபடி பகவத்ஸமாராதந ரூபமாக பகவானுடைய ப்ரீதிக்காகவே செய்து அவனுக்கு அர்ப்பணம் செய்யவேணு'மென்று பல தரம் கேட்டுத் தெரிந்துகொண்டிருக்கிறோம். இருப்பினும் 86400 செகண்டுகள் கொண்ட ஒரு நாளில் க்ஷண நேரமாவது பகவானைப்பற்றி நினைக்கிறோமா? நினைக்க நமக்கு அவகாச மில்லையா என்று சிந்தித்துப் பார்க்கிறோமா? நினைக்க வில்லையே யென்று எப்போதாவது அநுதாபப்படுகிறோமா? ஏன்?

இம்மாதிரி கேள்விகளை நம்மை யாராவது கேட்டால் மிகவும் கோபந்தான் வருகிறது. 'இவர்கள் யார் நம்மைக் கேட்க?' என்று தோன்றுகிறது. 'நீங்கள் இந்த விஷயங்களில் சரியாக நடந்து விட்டீர்களா என்னைக் கேட்பதற்கு?' என்று கூட அவர்களைத் திருப்பிக் கேட்டுவிடுகிறோம். 'அவரவர்களுக்கு ஏதோ அஸந்தர்ப்பம், அஸௌகர்யம்; இவற்றையெல்லாம் பற்றிக் கேட்பது சுத்த அலௌகிகம்' என்று சொல்லிவிட்டு நம்முடைய கார்யத்தைக் கவனிக்கப் போய்விடுகிறோம்.

வெறும் கிண்டலுக்காகவோ அல்லது நம்மை அவமானப்படுத்துவதற்காகவோ கேட்பவர்களாயில்லாமல் நம்முடைய நன்மையையே நாடி நிற்பவர்களான ஸ்நிக்தர்கள், அல்லது நம்மிடம் நிர்வ்யாஜக்ருபையுள்ள ஆசார்யர்கள் இம்மாதிரி நம்மை நம்முடைய ஹிதத்தை உத்தேசித்துக் கேட்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அல்லது நமக்கேதான் அகஸ்மாத்தாக நம்மைப்பற்றியும் நம்முடைய கார்யங்களைப் பற்றியும் சிந்திக்கும்போது சில ஸமயம் இப்படிப்பட்ட கேள்விகள் தோன்றுவா? அப்போது நாம் என்ன ஸமாதாநம் சொல்வது? 'இதுவரையில் போனது போகட்டும் இனிமேல் ஏன் அவைகளைச் சரிவரச்செய்துவர முயற்சிக்கக்கூடாது?' என்ற கேள்விக்கு நாம் என்ன சொல்வது?

இவற்றிற்கெல்லாம் அவரவர்கள் தந்தம் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு தமக்குள்ளேயே பதில் சொல்லிக் கொள்ளவேண்டும். பூர்வ துஷ்கர்மம் நம்மை நல்லகார்யங்களிலும், விஹிதமான கார்யங்களிலும் ப்ரவ்ருத்திக்கவொட்டாமல் செய்கிறது என்று வேதாந்த ரீதியாக ஸமாதானமிருந்த போதிலும் அதைச் சொல்லிக்கொண்டு நாம் தப்ப முடியாது. ஸர்வேச்வரன் நமக்கு புத்தி பலத்தைக் கொடுத்து அதைக் கொண்டு நன்மை தீமைகளைத் தெரிந்துகொண்டு அவைகளில் ப்ரவ்ருத்திப்பதற்கும் நிவ்ருத்திப்பதற்கும்

ஓரளவு ஸ்வாதந்தர்யத்தை அநுமதித்திருக்கிருன். அதன்படி நாம் நற்காரியங்களைத் தெரிந்துகொண்டு அவைகளிலிறங்கவேண்டும். அதற்காக அநுதினமும் நம் நடவடிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்க்கவேணுமென்று பெரியோர்கள் சொன்னர்கள்.

(ப்ரத்யஹம் ப்ரத்யவேக்ஷேத நரஶ்சரிதமாத்மந:।
கிந்நுமே பஶுபிஸ்துல்யம் கிந்நு ஸத்புருஷைரிதி ॥)

ப்ரதிதினமும் காலையில் எழுந்தவுடன் பகவத் ஸ்மரணம் செய்தபின் நாம் இத்தனைகாலம் நற்காரியங்கள் பலவற்றை செய்யாமலிருந்துவிட்டோமே என்று மனங்கலங்கி, இனி சாஸ்த்ரோக்த வழியில் நடப்போம் எனத் திடமாக ஸங்கல்பம் செய்துகொண்டு, அந்த ஸங்கல்பத்தை, அதற்கு விரோதிகளான பாபங்களைப்போக்கி பூர்த்திசெய்துவைக்க வேணுமென்று பகவானை ப்ரார்த்தித்துவிட்டு மேல் கார்யங்களைச் செய்யவேண்டுமென்று ஆஹ்நிகவிதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு நல்ல கார்யத்தைத் தெரிந்து கொள்வதுமட்டும் போதாது. அது விஹிதமான கார்யமாயிருந்தால் அதை அநுஷ்டிக்கவேண்டும். பூர்ணமாக அநுஷ்டிப்பது என்பது சிரமஸாத்யந்தான். எனினும் ஸர்வேச்வரனை ப்ரார்த்தித்துக் கொண்டு பெருமுயற்சி செய்து அநுஷ்டித்து வெற்றிபெற வேண்டும். ‘அநுஷடிப்பதற்கு நமக்கு சக்தியில்லை, ஸௌகர்யமுமில்லை, என்று நமக்குத் தோன்றுவதை அலசி ஆராய்ந்து பார்த்தோமானுல் வெறும் சோம்பேறித்தனத்தினுல்தான் அவ்வாறு நமக்குத் தோன்றுகிறது என்று புலப்படும். ‘அநுஷ்டிக்க வேண்டிய காலத்தில் வேறு கார்யங்கள் வந்துவிடுகின்றன: அவைகளைச் செய்யாவிடில் பலத்த நஷ்டமும் கஷ்டமும் நேர்கின்றன’ என்றும் தோன்றலாம். உண்மையை ஆராய்ந்து பார்த்தால் இதரகார்யங்களுக்கு எவ்வித தடையுமில்லாமல் கர்மாநுஷ்டானங்களை யதாகாலம் செய்துவர முடியும் என்பது புலப்படும். அடிக்கடி இம்மாதிரி ஆராய்ந்து உணர்ந்து ஊக்கத்துடன் கர்மாநுஷ்டானங்களைச் செய்ய முயன்ருல் அதில் மிக்க திருப்திகரமான முறையில் பயனடையலாம். நல்லதைத்தெரிந்து கொண்டு வாளாவிருப்பது விரும்பத்தக்கதன்று. ‘ஶ்ரமோ ஹ்யுத்தமோ(?) ஶ்ருதம்’ (தெரிந்துகொண்டதற்குப் பிரயோஜனம் அதன்படி நடப்பதே) ‘ஶுந: புச்சமிவ வ்யர்த்தம் பாண்டித்யம் தர்மவர்ஜிதம்’ (ஒருவனுக்கு தர்ம மில்லாத பாண்டித்யம் நாய்க்கு அதன் வாலைப்போல் பயனற்றது) என்று பெரியோர் பணித்தனர். ‘கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க வதற்குத்தக’ என்றதுவும் ஈண்டு உணரத்தக்கது. ஆக ஜ்ஞாநமும் அநுஷ்டாநமும் இரண்டும் மிக அவசியம். இவை இரண்டையும் கைக்கொண்டு க்ருதார்த்தர்களாக முயல்வோமாக.

*

ஆஸ்திகர்களுக்கு அறிவிப்பு

ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபா என்னும் பெயர்கொண்ட ஸபை
சென்னையில் 1947-வருஷம் அக்டோபர் மாதத்தில்
ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளின்
தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது.

இந்த ஸபையின் மூலமாகத் தமிழ் லிபியிலும், தெலுங்கு லிபியிலும்
நம்முடைய ஸம்ப்ரதாய க்ரந்தங்க ளெல்லாம் மிகவும் அழகிய முறையில்
அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

"ஸ்ரீராமாநுஜன்"

என்ற பெயரால் மாதப் பத்ரிகையும் தமிழ் தெலுங்கு உபய பாஷைகளிலும்
தனித்தனி நடத்தப்பட்டு வருகின்றது.

ஷை ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையில்

மொத்தமாக 250 ரூபாய் செலுத்துகிறவர்கள் பேட்ரன்கள்.

100 ரூபாய் செலுத்துகிறவர்கள் ஜீவிய சந்தாதாரர்கள்.

வருஷந்தோறும் (போஸ்டேஜ் உள்பட) 15 ரூபாய் சந்தா செலுத்துமவர்கள்
ஆர்டினரி மெம்பர்கள்.

ஆக இம்மூன்று வகுப்பிலும் சேர்ந்தவர்கள் மாதப் பத்ரிகைக்காகத்
தனிப்பட்ட சந்தா செலுத்தவேண்டிய தில்லை.
மாதப் பத்ரிகை மாத்ரம் விரும்புமவர்களுக்கு

தமிழ்ப் பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 4.

தெலுங்கு பத்ரிகையின் வருஷச் சந்தா ரூ. 5.

மற்றும் இது ஸம்பந்தமான விவரங்களுக்கு விசேஷ விளம்பரம் தருவித்துப் பார்க்க.
கடிதப் போக்கு வரத்துகளுக்கும் மணியார்டர் அனுப்புவதற்கும் விலாஸம்:—

P. B. அண்ணங்கராசாரியர், க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

க்ரந்தமாலா ஆபீஸ் பதிப்புகளுக்கு விரிவான காட்லாக் வரவழைத்துப் பார்க்க. உடையவர், நம்பிள்ளை, தேசிகன், மணவாளமாமுனிகள் முதலான பூருவாசாரியர்களருளிச்செய்த ஸகல க்ரந்தங்களும், அண்ணங்கராசாரியர் ஸ்வாமிகள் இயற்றிய நாலாயிர திவ்யப் பிரபந்த வியாக்யானங்கள், ஸ்ரீ வசநபூஷண ஆசார்ய ஹ்ருதயாதி ரஹஸ்ய வியாக்கியானங்கள், ஸகல ஸ்தோத்ரபாட வியாக்கியானங்கள் மற்றும் பல ஸம்ப்ரதாய நூல்கள், பலவகை உபந்யாஸ நூல்கள், சரித்திர நூல்கள் இங்கே கிடைக்கும்.

மானேஜர்,

க்ரந்தமாலா ஆபீஸ், காஞ்சீபுரம்.

Regd. No. M. 4437.

Arya Vaidya Vilasini Vaidya Sala,

H. O. CALICUT.

Estd. in 1921

[APPROVED BY THE GOVT. OF MADRAS.]

Proprietor and Chief Physician :—

K. NEELAKANTAN VAIDYAR, *Regd. Medical Practitioner.*

Branches :— 1. No. 24, Nagappa Iyer St., Triplicane, Madras.
2. Chinnakadai St., Teppakulam Post, Tiruchirappalli.
3. Dindugal Road, Mathurai.

STOCKISTS :—1. Dr. Kerrison, Salem ; 2. Dr. Karunakara Menon, Vasantha Hospital, Salem, Velur ; 3. Vaidyam Mahadeva Swamy Iyer, Virudhunagaram ; 4. National Stores, Devakottai ; 5. V. R. Menon & Co., 111, Rastaspeth, Poona ; 6. Karaikkudi ; 7. Sri P. K. Balasubramania Iyer, Palani ; 8. Sri S. G. Krishna Iyer, Coimbatore Variety Hall Road ; 9. Dindugal ; 10. Erode ; 11. Aruppukkottai.

All kinds of Ayurvedic Treatments Pizhichil, Dara, Navarakkizhi etc., undertaken. Success sure. Nursing home at H. O. and Branches. Treatment also undertaken at the patient's residence. Expert in Rheumatism, Paralysis, Brain fever, Appendicitis etc.

Many respectable gentlemen have tried our medicines and visited our Medical Factory, Medical Hall, Rare madicinal plants garden, Nursing Home etc. The names of some of the above said gentlemen who have given their kind testimonials are mentioned hereunder.

1. Sri A. S. Bharathan, G. M. Reuters & P.T.I., Bombay ; 2. Sri K. P. Gopala Menon, Bar-at-law, Madras ; 3. Sri M. C. B. Koman, I.C.S., Judge ; 4. Sri S. Y. Krishnaswamy I.C.S., Collector ; 5. K. Krishna Menon, Principal, Law College, Madras ; 6. Sri Kutty Krishna Menon, Govt. Pleader, Madras ; 7. Sri A. Mallikarjuna Rao, Medical Officer, Madras ; 8. Sri R. M. Mathew, Director of Public Helth, Madras ; 9. Sri M. K. Mookherjee, President, All India Ayurvedic Congress ; 10. Sri A. S. M. Nair, Commissioner, H. R. E. Board, Madras ; 11. Divan Bahadur T. Rangachariar, C. I. E., Madras ; 12. Sri Manjeri Rama Iyer, Advocate, Calicut ; 13. Sri K. M. Unnithan, I.C.S., Madras ; 14. Vaidyaratnam Sri P. S. Varier, Kottakkal, Madras.

OUR SPECIAL MAKES:—Panchavalkadi & Dasapushpadi Soaps for itches, Scabbies & Boils. PRASOOTHIKARISHTAM & PRASOOTHIKAMRITHA RASAYANAM best Tonic after delivery for women. GARBHA RAKSHINI PILLS for pregnant women.

In all the branches experieced Arya Vaidyans are in charge to look after.

Sri Neelakanta Vaidyar's frequent tour programme to branches & stockists will be published now and then in some of the Madras Dailies like the Hindu, Dinamani etc. for the information of the public.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.